Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU




முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 18 திங்கட்கிழமை (04.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 035

# இசைப்பிரியா படுகொலைச் சம்பவம்; சுயாதீனமான விசாரணை தேவை

## ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை



(லண்டன்)

இசைப்பிரியா படுகொலைச் சம்பவம் தொடர்பாக சுயாதீனமான விசாரணை தேவை என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் பங்கு கொள்வதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ள வேளையில் சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டிருக்கும் இசைப்பிரியா படுகொலை தொடர்பான ஒளிப் படக்காட்சிகள் உலக நாடுகளை மட்டுமல்லாமல் உலக நாடுகளெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி இசைப்பிரியாவை உயிருடன் இராணுவத்தினர் கைது செய்த காட்சியை ஒளிபரப்புச் செய்துள்ளமை தமிழ் மக்களை எரிச்சலடையச் செய்துள்ளது. நம்பிக்கைகளை தகர்ந்து போகச் செய்துள்ளது. மனித நேயமுள்ளவர்களை உலுப்பியுள்ளது.

தற்போது வெளியாகியிருக்கும் இசைப்பிரியா கைது செய்யப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டிருப்பதான செய்திகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரும் கடிதத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளது.



சுயாதீனமான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் அடையாளம் காணப்படின், நீதியின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும். அதுவே இறுதி யுத்தம் தொடர்பாக தமிழ் மக்களிடம்

19 பக்கம் பார்க்க...

# காணிப் பிணக்குகளைத் தீர்க்கவே அநுராதபுரத்தில் கலந்துரையாடல்

## ஊடகங்களின் செய்திக்கும் மறுப்பு

2013/1 இலக்க காணி சுற்று நிருபத்திற்கு அமைவாக அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகளுக்கு அந் தந்தப் பிரதேச செயலர்கள் தீர்வுகளைக் கண்டு வருகின்றனர். இருந்த போதிலும் பல பிணக்குகளுக்கு பிரதேச செயலர்களால் தீர்வுகள் காணமுடியாதுள்ளது. எனவேதான் பிரதேச செயலர்கள் இவ்வாறான பல இடங்களில் கொள்கை ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் அவ்வாறான் பிணக்குகளை எவ்வாறு கொள்கை ரீதியாக தீர்த்து வைப்பது என்பது தொடர்பில் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவினால் எற்பாடு செய்யப்பட்ட ஒரு பயிற்சிக் கலந்துரையாடலே எதிர்வரும் 5,6,7 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண காணி ஆணையாளர் தயானந்தா, யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் பத்திரிகைகளில் வெளியான மேற்படி காணி சம்பந்தமான கூட்டம் தொடர்பிலான செய்தி தொடர்பில் எமது செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

19 பக்கம் பார்க்க...

# மாநாட்டில் பங்குபற்றினால் யாழிற்கும் வருவார் மன்மோகன்

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்ய முடிவு செய்தால், அவர் வடமாகாணத்துக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்த உதவிய இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து, கடந்த மாத இறுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எழுதியிருந்த கடிதத்தில்,

19 பக்கம் பார்க்க...

# வடமாகாண ஆளுநர் மாற்றம்; ஜனாதிபதி முடிவெடுக்க வேண்டும்



## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

வடமாகாணத்தில் சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பதாக சம சமாஜக் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

போர் முடிந்து சமாதானமான சூழ்நிலை காணப்படுகின்ற இந் நிலையில் வடக்கில் இராணுவ ஆளுநர் ஒருவர் இருப்பது அவசியமில்லாத ஒன்றாகும் என்றும் வடக்கில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள வீடுகளும் காணிகளும் உரியவர்களிடம்

19 பக்கம் பார்க்க...

06



முடிவு

# ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறாது.

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும், ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ நடத்தப்படமாட்டாதெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொலநறுவையில் 19 பக்கம் பார்க்க...

13



கந்தனுக்கு

# வடக்கிற்குச் செல்ல அனுமதி; வெளிநாடுகள் கோரவில்லை



## அரசாங்கம் தெரிவிப்பு

கொமன்வெல்த் மாநாட்டுக்கு வரும் தமது நாட்டுக் குழுவினர், வடபகுதிக்குச் செல்ல விரும்புவதாக இதுவரை எந்த நாடும் கோரிக்கை விடுக்கவில்லை என்று, இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

கொமன்வெல்த் மாநாட்டுக்கு வரும் தமது நாட்டின் தலைவர் அல்லது உயர் நிலைப் பிரதிநிதிகள், வடபகுதிக்குச் செல்ல விரும்புவதாக எந்தவொரு நாடும் இதுவரை கோரிக்கை விடுக்க வில்லை.

ஆனால் அவர்கள் அத்தகைய கோரிக்கையை முன் வைப்பார்களேயானால், அதற்கான வசதிகளை

நாம் ஏற்படுத்திக் கொடுக்கத் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார். பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும்,

19 பக்கம் பார்க்க...

18



வாய்ப்பு

# தவறான சமிக்ஞை வழங்கிய பொதுநலவாய செயலகம்

## குற்றஞ்சாட்டுகிறது கனடா

பொதுநலவாய அமைப்பின் செயலகம் ஜனநாயக விரோத, தன்னிச்சையான செயற்பாடும், சர்வாதிகார ஆட்சிகள் மற்றும் சக்திகளுக்கு தவறான சமிக்ஞையை வழங்கியுள்ளதாக பொதுநலவாயத்திற்கான கனடாவின் சிறப்புத் தூதுவர் ஹக்சேகால் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாயத்தின் தரங்கள், கொள்கைகள் என எதனையும் செயலகம் கணக்கில் எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் 19 பக்கம் பார்க்க...

# ஜேர்மனியில் கோர விபத்து; மாதகல் வாசி உயிரிழப்பு

ஜேர்மனில் சுண்டார்ன் நகரத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு 9.20 மணி அளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் புலம் பெயர் தமிழர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மாதகலைச் சொந்த இடமாகக் கொண்ட அல்பிரட் அல்போன்ஸ் (வயது-42) என்ற குடும்பஸ்தரே உயிரிந்தவராவார்.

இவர் இரவுக் கடமைக்காக வேலைத் தளத்துக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த மோட்டார்க் காரால் மோதப்பட்டு தூக்கி எறியப்பட்டார்.

ஏனைய வாகனங்களை முந்திக் கொண்டு செல்ல காரில் வந்திருந்த 26 வயது இளைஞன் முயன்றபோதே விபத்து நேர்ந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் இளைஞனுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

மனைவி, 7 வயது மகன

19 பக்கம் பார்க்க...

# பொதுக்கிணற்றில் நீர் இல்லை; மல்லாவி சந்தையில் அவலம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவி பொதுச்சந்தைப் பகுதியில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் நீரின்மையால் நுகர்வோரும் பொதுச்சந்தை வியாபாரிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மழை இன்மையால் இப்பொதுச்சந்தை கிணற்றில் நீர் குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதைவிட இப்பொதுச்சந்தைப் பகுதியில் 27 மில்லியன் ரூபா செலவில் 2 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும் இக்கட்டட நிர்மாணப் பணிகளுக்கான நீர் கிணற்றிலிருந்தே எடுக்கப்படுவதால் தற்போது இக்கிணற்றில் நீர் முற்றாக வற்றியுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் நீரின்மையால் மலசலகூடத்திற்கும் நீரின்றியுள்ளதாகவும் இதனால் நுகர்வோரும் வியாபாரிகளும் சிரமத்துக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச சபை செயலாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.


பொதுச்சந்தையின் வருமானத்தைப் பெறும் பிரதேச சபை, சந்தை வியாபாரிகளின் நலனிலும் அக்கறை கொள்ளவேண்டும் எனவும், இது தொடர்பாக பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் ஆகியோரை சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

வறிய நிலையிலுள்ள 1000 ரூபா உதவித் தொகை மாதாந்தம் பெறுபவர்களது கொடுப்பனவு, முதியோர் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக, கலந்துரையாடவே அவர் வருகை தரவுள்ளதாக கூறப்படுகின்றது. (90)



கேதாரகௌரி விரத நிறைவுநாளான நேற்று கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலில் பூஜைகள் இடம்பெறுவதையும், காப்பு பெற்றுக்கொள்வதற்காக குழுமியிருக்கும் அடியார்களையும் காணலாம். (படங்கள் - 137)

# தொடர் சொற்பொழிவு

(யாழ்.நிருபர்)

சைவப்புலவர் பொன். சுகந்தனின் 'விரதங்களும் அதன் மகிமைகளும்' என்னும் தலைப்பிலான கந்தசஷ்டிகால தொடர் சொற்பொழிவு இன்று மாலை 4.30 மணிக்கு வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் கந்த சஷ்டி நாட்களில் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக சொல்லிசை வாரிதி என்னும் பட்டம் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10)


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ர. கனுசியன்

முகவரி : பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

அகவை 4 இல்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# மகளிர் அரபுக் கல்லூரி 23 வருடங்களின் பின் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்காக 23 வருடங்களுக்குப் பின்னர் பெண்களுக்கான அல்ஹம்திய்யா மகளிர் அரபுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அஷ்ஷேய்க் ஏ.எம்.ஏ.அனீஸின் (காஸிம்) கிறாஅத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, யாழ். மாநகரசபை உதவி மேயர் எம்.எம். ரமீஸின் வரவேற்புரையுடன் தலைமையுரையை அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் (நளீம்) நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக மினுவாங்கொட நிழாமியா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம்.ஜெஸ்மின் (திினி) உரையாற்றும்போது தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள சூழலில் மகளிர் அரபுக் கல்லூரி அவசியமானதாகும். பெண்கள் மார்க்க கல்வியை கற்ற பின்னர் அதை தத்தமது குடும்பங்களுடன் செயற்படும்போது இஸ்லாமிய வாழ்வு அதிகரிக்கப்படுவதாக கூறினார். தொடர்ந்து புதிய மாணவிகளுக்கு கிதாப் ஆரம்பித்து வைத்தார்.

தர்பிய்யா அமர்வு அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம்.முஜாஹித் வழங்க, அஷ்ஷெய்க் எம்.எம். பரூஸ் (ருஷிதி) நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்வுக்கு பள்ளிவாசல் நிர்வாகிகளும், உலமாசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (105)

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று புலோலியில் இடம்பெற்றுள்ளது.

வேலாயுதம் செல்வக்குமார் (வயது - 41) என்ற ஊரியவத்தை, புலோலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையே சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்ட சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு கிறிஸ்தவ சமய முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. (116)

# மெய்கண்டதேவர் குருபூசை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் இணைந்து நடத்தும் மெய்கண்டதேவர் குருபூசை நாளை மாலை 6.00 மணிக்கு புத்தூர் கன்னியர் வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வலி. கிழக்கு இந்துசமய அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.தெய்வலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை பிரதம விருந்தினராகவும், தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாளர் சைவப்புலவர் சி.நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2475 திகதி 02-11-2013

ஆங்கில எழுத்து: N

வெற்றி எண்கள் 14 20 21 40

போனஸ் இல: 68

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 250097 | 20/- | 5,001,940/- |
| 2 இல | 17874 | 100/- | 1,787,400/- |
| 3 இல | 360 | 1,000/- | 360,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10101 | 40/- | 404,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 736 | 1,000/- | 736,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000 | - |
| 1 இல + போனஸ் இல | 11843 | 100/- | 1,184,300/- |
| 2 இல + போனஸ் இல | 547 | 500/- | 273,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 500 | 200/- | 100,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 292102 | | 11,720,180/- |

இந்த புதன்கிழமை கப்ஸா ஜக்பொட் பரிசு ரூ. 10,682,275/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3176)

# கல்வியில் உயர் நிலையிலுள்ளவர்கள் தமது ஆற்றலை வளர்க்க வேண்டும்

## கணித ஆசான் இராஜரட்ணம்

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் அதிபர் என்.தெய்வேந்திரராஜா இராணுவப் பயிற்சி பெற்று "லெப்டினன் கேணலாக வெளியேறியிருப்பது மிக மகிழ்ச்சிக்குரியது. சர்வதேச புகழ்பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை மிகத் திறம்பட செயற்படுத்தி வரும் அதன் ஆளுமை, நிர்வாகத்திறன் என்பன மேலும் வளர்ச்சியடைய அவர் பெற்றுள்ள இராணுவப் பயிற்சிகள் வழிவகுக்கும் என இளைப்பாறிய கணித ஆசான் ஜெ.எஸ்.இராஜரட்ணம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் புதிய திட்டத்திற்கமைய இராணுவப் பயிற்சி பெற்று லெப்ரினன் கேணலாக வெளியேறியுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜாவுக்கு கல்லூரியில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இல்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஒவ்வொரு மனிதனது அறிவு ஆற்றல்கள் காலத்திற்குக் காலம் வளர்க்கப்பட வேண்டும். பல்வேறு துறைகளிலும் மனிதன் பெறும் பயிற்சிகள் அவனை ஆளுமை மிக்கவகையிலே சமூகத்தை வழிநடத்திச் செல்லக்கூடியதாகவும் உருவாக்கும். இது அவனது வாழ்க்கையை வளம்படுத்துவதோடு சமூகத்தை வலுப்படுத்தவும் பேருதவியளிக்கும் அந்த வகையில் கல்லூரியின் அதிபர் தெய்வேந்திரராஜா இராணுவப் பயிற்சிகளைப் பெற்று லெப்டினன் கேணலாக வெளியேறியிருப்பதைச் சமூகம் பாராட்ட வேண்டும்.

கல்விச் சேவையாற்றுபவர்கள் சிறப்பாகப் பல்வேறு பயிற்சிகளை காலத்துக்குக்காலம் பெற்றுக் கொள்ள வேண்டியது மிகமிக முக்கி யமாகும் அப்போது தான் நாட்டின் கல்வித் தரம் மேம்பாடடைய முடியும். இதன்மூலம் எதிர்காலம் எழுச்சி பெறமுடியும். இந்தக் கல்லூரியின் அதிபர் தெய்வேந்திரராஜா பெற்றுள்ள இராணுவப் பயிற்சிகள் பாடசாலையின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கும், மாணவர்களின் கல்வி ஆளுமை செயற்திறன் மேம்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் இதன் மூலம் எதிர்காலத்தில் தலைசிறந்த நாட்டிற்கும் தகுந்த பிரஜைகளை உருவாக்க முடியும் என்றார்.

## காகில்ஸின் தீபாவளி விலைக் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளி பண்டிகையைத் தொடர்ந்து காகில்ஸ் பூட்சிற்றி தினமும் தனது வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு பொருளை மிகக் குறைந்த விலைக்கு வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்தினை இன்று திங்கட்கிழமை 110 ரூபா பெறுமதியான ஒரு கிலோ சுப்பிரிகீரி சம்பா அரிசியை 75 ரூபாவுக்கு வழங்கவுள்ளது.

ரூபா 500 இற்கு வேறு பொருட்களைக் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படும். இதன் மூலம் ஒரு கிலோ சம்பா அரிசிக்கு 35 ரூபா வீதம் சேமிக்க முடியுமென மேற்படி பூட்சிற்றியின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.(10)

## சுயதொழில் கொடுப்பனவுக்கு 5 பயனாளிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யுன்செவ் நிறுவனம் வடக்கு சமூக சேவை திணைக்களம் ஊடாக கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு 35 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் நிதி வழங்கியுள்ளது. இவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்பட இருப்பதால் பயனாளிகளை சமூக சேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இதன்படி இந்தக் கொடுப்பனவை பெறுவதற்கு சா.மகாதேவன் கரவெட்டி மேற்கு, ஆ.பரமநாதன் அல்வாய் தெற்கு, பே.ஜெயசீலன் நெல்லியடி தி.அபிராமி அல்வாய் கிழக்கு, ஜெ.யோகநந்தினி, கரணவாய் தெற்கு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (18)

## மிருசுவில் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மிருசுவில் பொது நூலகத்தால் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாண வர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

கட்டுரை

பிரிவு -1

க.ஹனுகி (யா/ மிருசுவல் அ.த.க. பாடசாலை), யோ. வைஷ்ணவி, சி.டிலக்ஷி (யா/ உசன் இராமநாதன் ம.வி).

பிரிவு 2

ஸ்ரீ.தனுசா (யா/உசன் இராமநாதன் ம.வி), பீ.மேரிசிந்துஜா (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), சி.துர்க்கா (யா/ உசன் இராமநாதன் ம.வி)

வாசிப்பு

வி.பிரிந்துவி (யா/ உசன் இராமநாதன் ம.வி), கு.தேனுசா (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), க.வர்சனா (யா/ கரம்பகம் அ.த.க. பாடசாலை).

பேச்சு

ஜெ.றொ.அன்சன் (உசன் இராமநாதன் ம.வி), ச.டிலானி (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), சி.சாகித்தியா (மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை).

கதைகூறல்

த.அனாஜிகா (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), டி.கயல்விழி (யா/கரம்பகம் அ.த.க. பாடசாலை), ல.சங்கவி (யா/உசன் இராமநாதன் ம.வி).

சித்திரம்

வ.நிதோயன், பே.கவியரசன், நிலட்சன் (யா/உசன் இராமநாதன் ம.வி).

பொது அறிவு

ம.கேதாரணி, த.ஜீவிதா, த.யதுசோபன்.

சிறுகதை

ச.நிறேகா, ச.சுகந்தினி, கு.தஷாயினி (யா/ உசன் இராமநாதன் ம.வி).

ஆத்திசூடி, வர்ணம் தீட்டல் ஆகியவற்றில் பங்குபற்றிய அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் நிகழ்வில் பரிசு வழங்கப்படும். (11)

## நடமாடும் நூலக சேவை

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொதுநூலகத்தின் நடமாடும் நூலக சேவையொன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூலக கண்காட்சி, மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளதாக சுன்னாகம் பொது நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி ஆர்.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## கபேயின் தூய்மை?




கபே (சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு) யைப் பற்றி சில விசயங்களைச் சொல்லவேணும்.

இந்த அமைப்பு தேர்தலின் அவதானிப்புப் பணிகளையும் தேர்தலில் மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவதையும் தனது பிரதானமான பணியாகக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் பல பாகங்களில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகிறது.

அண்மையில் வடக்கிலும் இதனுடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும்.

ஆனால், இந்த மாவட்டங்களில் கபேயின் உறுப்பினர்கள் அத்தனை பேரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமே.

இவர்கள் தேர்தலின்போது கபேயின் ரீ சேர்ட்டையும் தொப்பியையும் அணிந்து கொண்டு நேரடியாகவே கட்சிப் பணியைச் செய்கிறார்கள். கடந்த தேர்தலில் இதை மக்கள் நன்றாக அவதானித்தனர்.

கபேயின் இலச்சினை பொறிக்கப்பட்ட அடையாளங்களைத் தாங்கிய உறுப்பினர்கள் என்பதால் தேர்தற் கடமையில் ஈடுபடும் பொலிஸாரும் வேறு சிவில் அதிகாரிகளும் இவர்களுக்கு மதிப்பைக் கொடுக்கிறார்கள்.

இதையெல்லாம் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, இவர்கள் தமது கட்சித் தேர்தல் பரப்புரையைத் தாராளமாகச் செய்கின்றனர். வாக்களிப்புச் சந்தர்ப்பத்தில் வாக்குச் சாவடிக்கு அண்மையில் நின்று கொண்டு கூட பரப்புரையில் ஈடுபட்டனர்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இப்படிச் செயற்படுவது முறைகேடு.

தேர்தல் முறைகேடுகளைக் கண்காணிக்கும் ஒரு தரப்பு தானே இப்படி முறைகேட்டில் ஈடுபடலாமா?

இதெல்லாம் கபேயின் தலைமைப்பீடத்திற்குத்தெரியாமல் இருக்கலாம்.

தலைமைப்பீடத்தினால் இந்த மாதிரியான குறைபாட்டினை அறிய முடியவில்லை, இனங்காண முடியவில்லை, தடுக்க முடியவில்லை என்றால், அந்தத் தலைமைப்பீடத்தின் நிலைமை எப்படியிருக்கும்?

அல்லது கபேயும் நாடகம்தான் ஆடுகிறதா?

இந்த உலகம் பல விதமான நாடகங்களையும், நடிக்கும் தரப்பையும் கண்டு கழித்தது.

வரலாற்றில் தவறுகளுக்கு உடனடி மதிப்புக் கிடைக்கலாம். நீண்ட ஆயுளும் மதிப்பும் கிடையாது.

'தலைமைப்பீடங்களுக்குத் தெரியாமல்தானே கீழ் மட்டத்தில் ஆயிரம் பிரச்சினைகளும் தவறுகளும் உள்ளன, அல்லது அப்படி நடக்கின்றன' என்ற பழைய புலுடாக்கதையை இங்கும் யாரும் சொல்லக் கூடும்.

அப்படிச்சொன்ன அமைப்புகளும் தலைமைகளும் இன்று இல்லை என்பதையும் அவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளலாம்.

கபே முதலில் தன்னைத் துப்புரவு செய்து தூய்மைப்படுத்திக் கொள்ள வேணும்.

யாருடைய காலிலும் செருப்பாக ஒரு பொது அமைப்பு இருக்க முடியாது.

அப்படி இருக்குமானால் அது வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள்தான் போகும்.

கபேயை முன்னிலைப்படுத்தும் ஊடகங்கள் கபேயின் குறைபாடுகளைக் குறைந்த பட்சமாகவேனும் சுட்டிக்காட்ட வேணும்.

மக்கள் எப்பொழுதும் பொது அமைப்புகளை முதலில் மதிக்கிறார்கள். அவற்றை நம்புகிறார்கள்.

ஆனால் அந்தப் பொது அமைப்புகள் இப்படி வெளிப்படையாகவே நம்பிக்கைக்கு மாறாகச் செயற்பட்டால் பின்னர் அந்த அமைப்புகளை அவர்கள் என்றும் மதிக்க மாட்டார்கள்.

கபேயின் நோக்கத்தில் பல நன்மைகள் உண்டு. அதனால், கபேயை மக்கள் மதிக்கின்றனர். ஆனால் அந்த நன்மைகளை இந்த மாதிரியான செயல்கள் பாழடித்து விடும். ஆகவே கபே தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள வேணும்.

முதலில் அது தன்னைத் தூய்மைப்படுத்துவது அவசியம்.

உள்ளூர் ஏஜென்டுகளை மட்டும் நம்பியிராமல், நல்ல - கண்ணியமான மனிதர்களை நம்பிச் செயலாற்ற கபே முன்வருவது அவசியம். அதுவே நல்லது.

அப்படியானால்தான் கபே மக்களுக்காக மக்களிடம் இயங்கவும் செல்வாக்கைச் செலுத்தவும் முடியும்.

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

- ஆபிரகாம் லிங்கன்

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அவரவர் இன மேன்மைக்கு ஆராய்ச்சி!

மனிதனின் பிறப்பே அவனது இயல்பையும் அவனது சமூகத்தின் இருப்பையும் தீர்மானிக்கிறது என்ற கோட்பாடு வெகு காலம் நிலவி வந்தது. சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு சமூக குழுக்களுக்கு இடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துவது இந்தக் கோட்பாடு.

இந்தக் கோட்பாட்டுக்கு எதிராகக் கொடி பிடித்தவர்களில் முக்கியமானவர் ஸ்டீபன் ஜே கௌல்ட் என்ற அறிவியல் அறிஞர். இதைப் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார் கௌல்ட்.

சாமுவேல் ஜோர்ஜ் மோர்டன் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மருத்துவர். அவர் உலகெங்கிலும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மண்டையோடுகளை வரவழைத்து அவற்றின் கனபரிமாணங்களை மதிப்பிட்டார். தன் ஆய்வுகளின் முடிவுகள் வெள்ளைக்காரர்களின் மண்டையோடுகள் மற்ற மண்டையோடுகளை விடப் பெரியதாகவும் கொள்ளளவு கூடுதலாகவும் உள்ளதால் வெள்ளையர்களுக்கே மூளை அதிகம் என்று நிரூபிப்பதாக அவர் சொன்னார்.

அமெரிக்காவில் அடிமை முறையை ஆதரித்தவர்களுக்கு இந்த ஆய்வு வரப்பிரசாதமாக இருந்தது. கறுப்பர்களை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதை ஆதாரபூர்வமாக அறிவியலின் அடிப்படையில் வரையறை செய்ததாக அவர்கள் மோர்டனைப் பாராட்டினர்.

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கௌல்ட், இப்படிப்பட்ட நிற, இன, பெருமை பேசும் கோட்பாடுகள் எப்படிப்பட்ட அழிவுகளுக்குக் காரணமாகி இருக்கின்றன என்பதை உணர்ந்தவராக இருந்தார். மற்ற இனத்தவரை விடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்ற எண்ணமே சண்டைகளையும் சர்ச்சைகளையும் தீரவிடாமல் பகையைப் பொங்கவைத்து வரும் நிலையில், இந்த மண்டையோட்டு ஆராய்ச்சி மனிதனிடம் மேலும் கொலைக் கருவிகளை வழங்குவதை அறிந்தார். தானும் இதுகுறித்த ஆராய்சசியில் இறங்கினார்.

ஜோர்ஜ் மோர்டனின் மண்டையோடுகளை எடுத்து தானும் அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, மோர்டன் அவை அனைத்தையும் அளந்து பார்க்கவில்லை, வயது, பாலினம், உயரம் போன்ற எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தனக்குத் தேவைப்பட்ட வகையில் மண்டையோடுகளைத் தேர்ந்தெடுத்து தவறான முறையில் ஆய்வு செய்து அதன் அடிப்படையில்தான் இந்த முடிவுக்கு வந்தார், எனவே அறிவியலில் மனச்சாய்வு ஆபத்தானது என்பதற்கு ஆதாரமாக இந்த முடிவையும் இதுபோன்ற பிற பிழைப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளையும் சுட்டிக்காட்டினார் கௌல்ட்.

இதுகுறித்து விரிவாக எழுதிய தன் புத்தகத்தில், அவர் பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தங்கள் பண்பாடுகளே உயர்ந்தது என்ற மனச்சாயவின் காரணமாக ஆய்வுகளில் எப்படிப்பட்ட தவறுகளைச் செய்தார்கள், அதனால் எத்தகைய பிழை முடிவுகள் ஏற்பட்டன, அவற்றைக் கொண்டு தங்கள் நம்பிக்கைகளையும் தங்கள் பண்பாட்டில் நிலவும் நம்பிக்கைகளையும் எப்படி நியாயப்படுத்தி வலுவாக்கிக் கொண்டார்கள் என்று எழுதியிருக்கிறார்.

அறிவியலிலும் அவரவர் இனம், நிறம், மொழி, கலாசாரங்களுக்கேற்ப மனச்சாய்வுகள் இருக்கும். அவை அந்த முடிவுகளிலும் பிரதிபலிக்கும் என்று எடுத்துக்காட்டியதே கௌல்டின் முன்னோடித்தன்மை.

இனப் பெருமையையும் மேன்மையையும் தங்கள் கொடியாகத் தூக்கிப் பிடித்தபடி மக்களைப் பகையாளிகளாய் எதிரெதிரே நிறுத்தி, அந்த அழிவுப்பாதையில் அரசியல் செய்து குளிர் காய்பவர்கள் எப்போதும் இருந்துகொண்டு தானிருக்கிறார்கள்!

அவர்களிடமிருந்து மக்களை மீட்பதற்கு உதவுவதே சமூகத்தின் சிந்தனைச் சக்திகளது முதற்கடமை என்பது உணரப்பட வேண்டும்.

- ஆசிரியர்

# மத்திய கிழக்கில் வைரஸ் பாதிப்பு பணியாளர்களுக்கு விழிப்புணர்வு

## சுகாதார அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் புதிய வைரஸ் நோய் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனால் வேலை வாய்ப்பு பெற்று அங்கு செல்லும இலங்கையர்களுக்கு அவ் விடயம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பரவிவரும் மேற்படி நொவெல் கொரனா வைரஸ் தொடர்பில் தெளிவூட்டல் மேற்கொள்ள சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அங்கு அந்த வலய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வழிபாடுகளுக்குச் செல்வோருக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் நோயை இந்த நாட்டில் பரவுவதைத் தடுப்பதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கம் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பபா பலிஹவடன குறிப்பிட்டுள்ளார்.

நொவொல் கொரனா வைரஸ் தொற்றினால் மத்திய கிழக்கு வலயத்தில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 60 மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு வலயங்களுக்குச் சென்று திரும்பியுள்ளவர்களுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக வைத்தியர்களை நாடுமாறும் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பபா பலிஹவடன கேட்டுக் கொண்டுள்ளார்.

நொவொல் கொரனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு விரைவில் இந்த வைரஸ் பரவக்கூடும் எனவும் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

# மலையகம் செல்ல விரும்பும் பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ்

(லண்டன்)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரும் இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் நுவரெலியாவில் உள்ள பெட்ரோ தேயிலைத் தோட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக பிரித்தானியாவின் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1954ஆம் ஆண்டு மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் கணவரும், இளவரசர் சார்ள்ஸின் தந்தையுமான கோமகன் பிலிப் இலங்கைக்கு விஜயம் செய்த போது பெட்ரோ தோட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் தனது விஜயத்தின் ஞாபகார்த்தமாக தேயிலைச் செடி ஒன்றையும் நாட்டியிருந்தார். இந்த தேயிலைச் செடியில் இருந்து பறிக்கப்பட்ட தேயிலையில் இருந்து தயாரிக்கப்பட்ட ஒரு கோப்பை தேநீர் கடந்த வருடம் நடைபெற்ற மகாராணியின் வைர விழாவில் 40 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

தனது தந்தையின் விஜ[illegible]திற்குப் பின்னர் 59 வருடங்[illegible] கழித்து இளவரசர் சார்ள்ஸ் இந்தத் தோட்டத்திற்கு விஜயம் செய்வது இலங்கையில் தேயிலை தொழிற்துறைக்கு நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும் என அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

# வடக்கு கடலில் இந்திய மீனவர்கள்; மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிக்கு மறுப்பு

தமிழ்நாடு மீனவர்களை வாரத்தில் ஒருநாள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பாக, இந்தியா முன்வைத்த திட்டத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

இலங்கை கடற்றொழில் அமைச்சு அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது, இந்தியத் தூதரக அதிகாரிகளால் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தது.

புதுடில்லியின் இந்தத் திட்டம் குறித்து, கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவோ, இந்தியத் தூதரக அதிகாரியோ கருத்து வெளியிட மறுத்து விட்டனர். தற்போது, தமிழ்நாட்டு மீனவர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்து வருகின்றனர்.

இந்தநிலையில், மீன்பிடிப் பிரச்சினை தொடர்பாக, வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரையும் உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யும்படி கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணித்திருந்தார்.

இந்தக் கூட்டம் இன்னமும் நடத்தப்படாத நிலையில், அமைச்சர் ராஜித சேனாரத்ன, உள்ளூர் மீனவர்களுடன் இந்தியத் திட்டம் குறித்து விவாதித்துள்ளதாகவும், அதனை அவர்கள் விரும்பவில்லை என்றும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசியல்வாதிகளின் அழுத்தங்களில் இருந்து விடுபடவே, புதுடில்லி அரசாங்கம், இந்தத் திட்டத்தை முன்வைத்ததாக, இராஜதந்திர [illegible]டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல்வேறு காரணங் களுக்காக இந்தியாவின் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டை அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

வாரத்தில் ஒரு நாள் தமிழ்நாட்டு மீனவர்களை மீன்பிடிக்க அனுமதித்தால், கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கைச் சூழல் பாதிக்கப்பட்டு விடும் என்று அரச தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# வியாபார முகாமைத்துவம் சான்றிதழ் கற்கை நெறி

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கணிதம், மொழி உட்பட ஏதாவது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானங்கள் அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் மட்டம் I ஐப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏனைய தகவல்களுக்குமாக பிராந்திய கற்கை நிலையங்களில் 350 ரூபா பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பப்படிவங்களை வாங்கிய பிராந்திய கற்கை நிலையங்களின் உதவிப் பணிப்பாளர் அல்லது பிராந்திய பொறுப்பதிகாரிகளிடம் கையளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# மாநாட்டுக்காக கரையும் மக்களின் வரிப்பணம்

கொழும்பில் இடம்பெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டுக்காக அரசு பணத்தை தண்ணியாகச் செலவிடுவதாக எதிர்க்கட்சிகள் அரசு மீது குற்றம் சாட்டியுள்ளன. கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி பொதுநலவாய நாடுகளின் மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது 15 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வுக்கு மாத்திரம் இலங்கை அரசாங்கம் 50 மில்லியன் ரூபாய்களைச் செலவிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் பத்தரமுல்ல என்ற இடத்தில் நான்கு நாட்களாக களியாட்ட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதற்கும் புறம்பாக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் 2013 ஆம் ஆண்டின் பொதுநலவாய அமர்வு நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பித்து 17 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இதில் சுமார் 2000 பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

# தமிழ்நாட்டில் "மாணவர் எழுச்சி" என்ற ஒன்று நடந்ததா என்ன?

■ ஒத்திசைவு கட்டுரையிலிருந்து


**என்னடா பல மாமாங்கங்கள் முன் டெஸோ ஆரம்பித்து புஸ்ஸோவாக்கினோமே, அவ்வளவு நேரத்தையும், சக்தியையும், அறிவையும் (!) விரயம் செய்தோமே, அதிலிருந்து என்ன கற்றுக்கொண்டோம், அதனால் அந்த இலங்கைத் தமிழர்களுக்கு என்ன பிரச்சினைகள் தீர்ந்தன என்பது அந்த புஸ்ஸோக்காரர்களுக்கும் தெரியாது. நாமும் அம்மாதிரி அசௌகரியக் கேள்விகள் கேட்க மாட்டோம். பின்னர் ஏன் தூசிதட்டி அதனை அண்மையில் மறுபடியும் ஆரம்பித்தோம் என அந்த 'டைம்பாஸ்' டெஸோ ஆசாமிகளும் சொல்ல மாட்டார்கள் நாமும் கேட்க மாட்டோம். நம்முடைய தமிழ்தடித்தனம் என்பது அளவில்லாதது.**

மாற்றங்களை, நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது, அவற்றைப் பற்றி அவதானிக்கும்போது, நமக்குப் பொதுவாக நிதானம் இருப்பதில்லை. அவற்றின் காரணமாக - உடனடியாக, மிகக் குறைந்த கால அளவில், பல பெரிய சாதக/பாதக விளைவுகள் ஏற்படும் என்று எண்ணிக் குதூகலம் அடைவோம், அல்லது படு பயங்கர பீதியுறுவோம், அதீத உணர்ச்சிகளுக்கும் புல்லரிப்புகளுக்கும் இரையாவோம்.

அதேசமயம் - நாம், அம்மாற்றங்களினால், நிகழ்வுகளினால் - நெடிய கால அளவில், மெதுவாக, திடமாக நடக்கும், நடக்கப்போகும் சாதக/பாதக விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவே மாட்டோம். அப்படியே எண்ணிப் பார்த்தாலும், அவற்றை, அவற்றின் தாக்கத்தை - மிகமிகக் குறைவாகவே மதிப்பிடுவோம்.

நம் தமிழ்ச்சமூகத்தில், பொதுவாக, நிகழ்வுகளின் காரணிகளை, வரலாற்றுப் பின்புலங்களை, சாதக பாதகங்களை - அவற்றின் சமகால, எதிர்கால விளைவுகளை, தருக்கரீதியாக அவதானித்து நம்மை, நம் எதிர்வினைகளை வளர்த்தெடுத்துக் கொள்வது என்பது நடப்பதில்லை. நிதானம், சமனத்தன்மை போன்றவை சார்ந்த அணுகுமுறைகளெல்லாம் நமக்கு ஒத்துவருவதில்லை. பத்து நிகழ்வுகளில் ஒன்றையாவது இப்படித் தராதரம் பார்த்து அறிய முற்படுவோம் எனக் கூடப் புறப்படுவதில்லை. நம்முடையவை எல்லாம், சிந்திப்பால் பாதிக்கப்படாத முட்டியடி எதிர்வினைகள்தாம். இந்தப் போக்குக்கு நாம் கொடுக்கும் விலை மிகவும் அதிகம்...






எடுத்துக்காட்டாக சமீபத்தில் நடந்த ஒன்று: "மாணவர் போராட்டம்" (இது இலங்கை அரசுக்கு எதிராக, "தமிழ்" ஈழத்துக்கு ஆதரவாக - என்று பரவலாக நம்பப்பட்டது). கல்லூரிகள் மூடப்பட்டன! கல்லெறிதல்கள், பொதுச்சொத்து நாசங்கள், பதாகைகள் ஏந்தல்கள், கோஷங்கள், போவோமா... ஆஆ... ஊர்கோலங்கள், அடையாள உண்ணாவிரதங்கள், குப்பை போடல்கள், மிகக்குறைந்த எண்ணிக்கையில் வரும் இலங்கையின் யாத்ரீகர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் கூடக் கதிகலங்க விரட்டல்கள், ஊர் இரண்டு பட்டதால் தொலைக்காட்சிக் கோமாளிகளுக்குக் கொண்டாட்டக் கும்மாளங்கள் இன்னபிற இன்னபிற...

நம்முடைய முதல் முட்டியடி எதிர்கொள்ளல் "ஆஹாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி." இதனால் ஸ்ரீலங்கா அரக்கன் மாய்ந்து ஈழத்தமிழ்த்தாய் புத்துணர்வு பெறுவாள். எங்கும், எதிலும், எப்போதும் தமிழீழம். தமிழ் நாட்டில் "மாணவர்" புரட்சி செய்து புதியதோர் உலகம் சமைக்கப் போகிறார்கள். பின்னர், தமிழக அரசியல் சாக்கடையைத் துப்புரவு செய்யப் போகிறார்கள்! ஆஹா, விடிவு காலம் வந்தேவிட்டது!!

இதன் தற்போதைய நிலை: அய்யய்யோ! "மாணவர் போராட்டம்" என்று ஒன்று நடந்ததா என்ன? அடக் கடவுளே! ஆண்டிறுதித் தேர்வுகள் காலம் கடந்து நடக்கப் போகின்றனவாமே? மேற்படிப்பு படிப்பது தொடர்பான காலக்கெடுக்களில், மாணவர்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்துவிடுமோ?

இந்த "மாணவர் போராட்டம்" என்ற ஜந்துவின் நெடுங்கால அளவுத் தாக்கம் கீழ்க்கண்டபடியாகவே அமையச் சாத்தியக் கூறுகள் அதிகம்.

மாணவ/மாணவியருக்கு வரக்கூடிய "விட்டேற்றி மனப்பான்மை" - அதாவது இவர்கள் இவ்வளவு மாய்ந்து மாய்ந்து "மாணவர் போராட்டம்" செய்தும் ஒன்றும் நடக்கவில்லை ஆக இவர்கள் என்ன அரசியல் செய்தாலும் ஒன்றும் நடக்கப்போவதில்லை என்கிற தருக்கச் சித்திரம் விரிதல்.

"மாணவ" மணிகளுக்கு எதிர்காலம் குறித்த அவநம்பிக்கை -"நம்மால் முடியாது தம்பி, நம்பு!" என்னும் மனப்பான்மை.

தமிழக அரசியல்வாதிகள் முதுகில் குத்திவிட்டார்கள் என்கிற தான்தோன்றித்தனமான முடிவும், ஆக அரசியலைக் கண்டால் தூர விலகு எனும் எதிர்மறை மனப்பான்மை வளர்ச்சியும்.

இந்த "மாணவர் போராட்ட" மணிகளால் அவதிப்பட்ட பொதுமக்களின் "என்ன ஆட்டம் ஆடினாங்கப்பா!" எனும் வெறுப்பு கலந்த நிம்மதி. இந்த மாணவ மணிகளால் எதிர்கால மாணவர்களுக்கும் அவப்பெயர்.

அகில இந்திய அளவில் தமிழக மாணவர்களின் ∴ இளைஞர்களின் மதிப்பு வீழ்ச்சி! இவர்களின் அரைகுறைத் தலைமை பற்றிய, இவர்களின் சமூகமாற்ற இயக்கங்கள் பற்றிய புரிதல்கள் மேலான சரியான கேள்விக்குறிகள் மற்றவர்களுக்கு உருவாகியிருக்கும்.

என்னடா பல மாமாங்கங்கள் முன் டெஸோ ஆரம்பித்து புஸ்ஸோவாக்கினோமே, அவ்வளவு நேரத்தையும், சக்தியையும், அறிவையும் (!) விரயம் செய்தோமே, அதிலிருந்து என்ன கற்றுக்கொண்டோம், அதனால் அந்த இலங்கைத் தமிழர்களுக்கு என்ன பிரச்சினைகள் தீர்ந்தன என்பது அந்த புஸ்ஸோக்காரர்களுக்கும் தெரியாது. நாமும் அம்மாதிரி அசௌகரியக் கேள்விகள் கேட்க மாட்டோம். பின்னர் ஏன் தூசிதட்டி அதனை அண்மையில் மறுபடியும் ஆரம்பித்தோம் என அந்த "டைம்பாஸ்" டெஸோ ஆசாமிகளும் சொல்ல மாட்டார்கள் நாமும் கேட்க மாட்டோம். நம்முடைய தமிழ்தடித்தனம் என்பது அளவில்லாதது.

சரி. இலங்கைப் பிரச்சினையில் நம்மால் ஒரு முடியும் பிடுங்கக்கூடிய அளவில் (அவை கரங்களாலானாலும் சரி, கருத்துகளானாலும் சரி) நாம் மருந்துக்குக்கூட இல்லை என்பதை நாம், நம் உள்மனத்தில் மிக நன்றாக அறிவோம் - ஏனெனில், நாம் நம்பும் நம் தமிழ்ப் பாரம்பரியம் அப்படி ஆக்கிவைத்திருக்கிறது நம்மை...

ஆனால் பாழாய்ப் போன மனது, நம்முடைய அகங்காரமானது-நம்மை வீரமாக,பேராண்மையோடு இருக்கக் கூப்பாடு போடுகிறது. ஆனால் நமக்கோஎன்னசெய்வது என்பது புரிவதில்லை. எப்படியாவது கோழை இல்லை, உதவாக்கரை இல்லை என்று நம்மை உலகுக்குத் தெரிவிக்க நாம் படாதபாடு பட்டு அல்லாடுகிறோம். இப்போது நாம் "பேராண்மைத் தாழ்வு இழப்பீட்டுத் தத்துவ"த்தை உபயோகிக்கிறோம். தமிழகப் பொதுச் சொத்துக்களை சர்வ நாசம் செய்து ஸ்ரீலங்கா அரசுக்குப் பாடம் புகட்டுகிறோம்.

தமிழகத்தில் ஷாமியானா போட்டு அடையாள உண்ணாவிரதம் இருந்து இலங்கையில் வாடும் தமிழ் மக்களுக்கு தலப்பாகட்டு பிரியாணி பாக்கெற் அனுப்புகிறோம்.

தமிழகமெங்கும் சுவரொட்டிகளும், பிட்நோட்டீஸ்களும் அச்சடித்து ஒட்டிக் கிழித்து குப்பைமயமாக்கி, கையாலாகாத ஸ்ரீலங்கா நகராட்சிகளுக்குப் பாடம் கற்பிக்கிறோம்.

பாடசாலைகளுக்குப் போகாமல், வெளியிலிருந்து கல்லெறிந்து தொலைக்காட்சியில் வீரவசனப் பேட்டியளித்து, ஸ்ரீலங்கா படையினருக்கு மகாமகோ உயிர்ப்பயம் ஊட்டுகிறோம்.

இங்கு வரும் சொற்ப ஸ்ரீலங்கா யாத்ரீகர்களுடன் ஜல்லிக்கட்டு விளையாடி நம் பண்டமிழ் வீரத்தை நிலை நாட்டுகிறோம்.

ட்விட்டரிலும், வலைப்பூக்களிலும், / பேஸ்புக்கிலும் ஒரே வீரம்தான், புல்லரிப்புதான்... இவற்றைத் தவிர, ராஜபக்ஷவின் படங்களை எரித்து, பொம்மைகளைத் தூக்கில் போட்டு - அந்தக் கொடியவீர் ராஜபக்ஷவைப் பல்லாயிரம் முறைகள் கொன்று உயிர்ப்பித்து, கொன்று உயிர்ப்பித்து - அவருக்கே தான் இருக்கிறோமா இல்லையா என்கிற மனக் கிலேசம் உண்டுபண்ணுகிறோம்.

ஆக நம் பேராண்மையை மீண்டும் நிலை நாட்டி,எல்லோரும் வெகுகாலம் சந்தோஷமாக வாழ்ந்திருப்போம். ●

**நம் தமிழ்ச்சமூகத்தில், பொதுவாக, நிகழ்வுகளின் காரணிகளை, வரலாற்றுப் பின்புலங்களை, சாதக பாதகங்களை - அவற்றின் சமகால, எதிர்கால விளைவுகளை, தருக்கரீதியாக அவதானித்து நம்மை, நம் எதிர்வினைகளை வளர்த்தெடுத்துக் கொள்வது என்பது நடப்பதில்லை. நிதானம், சமனத்தன்மை போன்றவை சார்ந்த அணுகுமுறைகளெல்லாம் நமக்கு ஒத்துவருவதில்லை. பத்து நிகழ்வுகளில் ஒன்றையாவது இப்படித் தராதரம் பார்த்து அறிய முற்படுவோம் எனக்கூடப் புறப்படுவதில்லை. நம்முடையவை எல்லாம், சிந்திப்பால் பாதிக்கப்படாத முட்டியடி எதிர்வினைகள்தாம். இந்தப் போக்குக்கு நாம் கொடுக்கும் விலை மிகவும் அதிகம்...**

# சந்திரிக்காவுடன் பொன்சேகா கைகோர்த்து களம்குதிக்க முடிவு



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுடன் இணைந்து தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து கலந்தாலோசித்து வருவதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படுமென அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஊழல் நிறைந்திருக்கிறது. வீதி அபிவிருத்தி உட்பட அனைத்து வேலைத் திட்டங்களிலும் நிதிக் கையாடல் அதிகரித்துள்ளது. மக்களின் வரிப் பணம் சிலரது பைகளுக்கு செல்கிறது.

தனிப்பட்டவர்களின் நன்மைகளுக்காக பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு என்பன சீரழிந்து போகின்றன. இந்தநிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நன்மதிப்பு குறைந்து வருகிறது.

எனவே அக்கட்சியைப் பாதுகாப்பதற்காக பல்வேறு அதிரடித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அண்மையில் சந்தித்த போது என்னிடம் தெரிவித்தார். அத்துடன் தற்போது அரச அமைச்சர்கள் உறுப்பினர்களில் பலர் தன்னுடன் இணைந்து செயற்பட உறுதியளித்தார்கள் என்றும் அவர் கூறினார்.

என்னுடனும் இணைந்து அடுத்த வருடம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான விசேட முன்னெடுப்புக்களை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்தை மீட்பதற்கான எனது நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுமாறு ஏற்கனவே அவருக்கு அழைப்பு விடுத்தேன்.

தற்போது இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நாங்கள் இருவரும் நடத்தி வருகிறோம். எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து விரைவில் பல்வேறு திட்டங்கள் உள்ளன. விரைவில் எங்களது பலத்தை வெளிப்படுத்துவோம் என்றார்.

# இலங்கையின் களநிலவரம் வத்திக்கானுக்கு அறிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக வத்திகானுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத குரு ஒருவர் இவ்வாறு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

வத்திக்கான் மற்றும் பேராயர்களுக்கு இவ்வாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுக்கு இலங்கை குறித்து பிழையான தகவல்களை வெளியிடும் வகையில் இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வெள்ளைவான் கடத்தல், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தபபட வேண்டுமென யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கு உட்பட்ட வலயத்தில் கத்தோலிக்க மத குருவாக கடமையாற்றும் மண்டலராஜா வணக்கத்திற்குரிய பிதா ஒருவரே கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

# கட்சி தாவலுக்கு ஆப்பு சுதந்திரக்கட்சி ஏற்பாடு

(கொழும்பு)




எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் கட்சி உறுப்பினர்கள் கட்சி தாவுவதனை தடுக்கும் வகையில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் விசேட உறுதிமொழியொன்று பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாகவே இந்த ஆவணத்தில் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

எந்த காரணத்திற்காகவும் கட்சித் தாவுவதில்லை எனவும், கட்சியின் தீர்மானங்களுக்கு இணங்குவதாகவும் உறுதியளித்து ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சிக் கோட்பாடுகளை மீறிச் செயற்பட்டதனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# சீனத் தயாரிப்பு பஸ்வண்டிகள் இறக்குமதி செய்ய முடிவு

(கொழும்பு)



இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மேலும் 2000 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து இந்த பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் உப தலைவர் எல்.ஏ. விமலரத்ன தெரிவித்துள்ளார். குறித்த பஸ்கள் தூர சேவைப் பயணங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தமது சபைக்குச் சொந்தமான 5 ஆயிரத்துக்கும் அதிகமான பஸ்கள் தற்போது சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் இலங்கை போக்கு வரத்துச் சபையின் உப தலைவர் எல்.ஏ.விமலரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முதலீட்டுக்கு வாய்ப்பு

இந்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டில், 1200 இற்கும் அதிகமான வர்த்தக பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டின் போது, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் காட்சிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இலங்கைக்கு சிறந்த முதலீடுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கஞ்சா வியாபாரம் மன்னாரில் அமளி

(கொழும்பு)

மாங்குளம் பகுதியில், மன்னார் மாவட்ட விசேட பொலிஸ் பிரிவு மேற்கொண்ட சோதனையில் 5 கிலோ 150 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மாங்குளம் - மல்லாவி பகுதியில் வைத்து இந்த கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக கோவில் குளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மன்னார் நகரிலும் நேற்றுமுன்தினம் ஒன்றரை கிலோ கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தாழ்பாடு பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஊடக காரரின் கறுப்புப்பட்டியல் ஊடக அமைச்சு தயாரிப்பு

## தடைவிதிக்க மகிந்த மறுப்பு



(கொழும்பு)

கொமன்வெல்த் மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்கு 15 வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு தடைவிதிப்பதற்கு ஊடகத்துறை அமைச்சு முன்வைத்த திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வரும் 15 வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பெயர்களை கொண்ட கறுப்புப்பட்டியல் ஒனறை, இலங்கை ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தயாரித்திருந்தார்.

இவர்களை கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க அனுமதி மறுக்கும் திட்டம் குறித்து ஜனாதிபதியிடம் கெஹலிய ரம்புக்வெல எடுத்துக் கூறியிருந்தார்.

அந்த கறுப்புப்பட்டியலை வாங்கிப் பார்த்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அனைவரையும் கொமன்வெல்த் மாநாடடில் பங்கேற்க அனுமதிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

அவர்களை அனுமதிக்காவிட்டால், மிகப்பெரியளவில் அவர்களால் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்றும், கெஹலிய ரம்புக்வெலவிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல கையளித்த அந்த கறுப்புப்பட்டியலில் சனல் 4 தொலைக்காட்சியில் இலங்கையின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய, கல்லும் மக்ரேயின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# சரணாலயம் ஊடாக நெடுஞ்சாலை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்கு

வில்பத்து விலங்குகள் சரணாலயத்தின் ஊடாக நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கக் கோரி தாக்கல் செய்யபபட்ட வழக்கு ஒன்றை இலங்கை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.


இந்த சரணாலயத்தின் ஊடாக புத்தளம் முதல் மன்னார் வரை நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக வந்துள்ள செய்திகளை அடுத்தே, இந்த வழக்கை புத்தளத்தில் வசிக்கும் மக்கள் சிலர் தாக்கல் செய்ததாகத் தெரிகிறது.

இந்த வீதியை அமைப்பதற்கான முடிவு சுற்றாடல் விதிகளை மீறும் செயல் என இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் மூலம் வில்பத்து பகுதியில் இருக்கும் வன விலங்குகளுக்கும், அந்த வழியாகச் செல்லும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம் என்றும் அவர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ள உச்சநீதிமன்றம், அடுத்த மார்ச் மாதம் வரை வழக்கை ஒத்தி வைத்துள்ளது.





கொழும்பு இறையியல் கல்லூரியின் யாழ்ப்பாணம் கல்வி நிலையத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை பற்றிக் சபையின் உபதலைவரும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான அமால் குமாரகே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பட்டத்தை வழங்குவதையும், மாணவர்களின் இசை நிகழ்வையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படம். பார்த்தீபன்)

# போக்குவரத்துக்கு உதவாத நாவற்காடு- மிருசுவில் வீதி

## -புனரமைப்பு எப்போது?-

(கொடிகாமம்)

வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள நாவற்காடு மிருசுவில் வீதியானது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரிய இவ்வீதியானது கடந்த வருடம் களிமண் பறித்து வேலை செய்யப்பட்டதாகவும், அதனால் மழைகாலங்களில் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த பகுதியில் உள்ள நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு மாணவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தியே வரணி மகாவித்தியாலயம், குடமியன் அ.த.க.பாடசாலை போன்றவற்றிற்கு செல்வதாகவும், மழை பெய்வதால் தற்போது சேறும் சகதியுமாக காணப்படுவதாகவும் இதனால் வீதியைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இந்த வீதியினை திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# கேப்பாபிலவு கிராமத்தில் புதிய ஆலயம் நிர்மாணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் இந்து ஆலயம் இல்லாத நிலையில் தற்போது இந்து ஆலயம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ் மாதிரி கிராமத்தில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் புதிதாக கட்டப்பட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இக்கிராமத்தில் ஆலயம் இல்லாத குறையை தீர்க்கும் முகமாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் வழங்கிய 5 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் இக்கிராம மக்களினால் 2 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டு மொத்தம் 7 இலட்சம ரூபாவில் இவ்வாலயம் புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ளது. (125)

# கந்த சஷ்டி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திபுரம் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி ஆலய கந்த சஷ்டி உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4 மணிக்கு முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று கந்த சஷ்டி படிப்பும் இடம்பெறுவதுடன் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சூரசங்ஹார உற்சவமும் நடைபெறுவதோடு சனிக்கிழமை காலை பாரணை விசேட பூசையும் மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ)

★ ★ ★ ★ ★

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான கந்த சஷ்டி விழா இன்று ஆரம்பமாகின்றது.

தினமும் பிற்பகல் 3 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட அபிசேகமும் விசேட பூஜையும் நடைபெற்று வசந்த மண்டபத்தில் விசேட பூஜையும் உள்வீதி திருவுலாவும் இடம்பெறும்.

5ஆம் நாளான வெள்ளிக்கிழமை சூரசங்ஹார உற்சவம் இடம்பெறுவதுடன் 6ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. இக்கந்தசஷ்டி உற்சவம் ஆதீன தர்மகர்த்தா. ம.பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (இ)

★ ★ ★ ★ ★

கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய கந்தசஷ்டி விழா இன்று ஆரம்பமாகின்றது. 5 தினங்களும் மாலை 4.30 மணிக்க முருகப்பெருமானுக்கு விசேட அபிசேகம், ஆராதனைகள் இடம்பெறுவதுடன் 5ஆம் நாள் மாலை 4மணிக்கு சூரசங்காரம் இடம்பெறுவதுடன் மறுநாள் காலை 7மணிக்கு பாரணை அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ)

# சமாதான நீதவான்



(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கைச்சேர்ந்த சிவஞானம் இதயதீபன் அண்மையில் யாழ்ப்பாண நீதிமன்ற நிர்வாக வலயத்திற்கான சமாதான நீதிவானாக மல்லாக நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை இளங்கலைமாணிப்பட்டதாரியுமாவார். தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் பணியாற்றிவரும் இவர் சமூக மட்ட அமைப்புக்களின் உறுப்பினராக இருந்து சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் தேசிய அருங்கலைகள் பேரவையில் உள்ள வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள் கணக்கியல் மற்றும் பெறுகை அலுவலர் தரம் I, சந்தைப்படுத்தல் உதவியாளர் தரம் II மின்சார தொழில்வலர் தேர்ச்சிபெற்றவர் தரம் III ஆரம்ப மட்ட ஊழியர் வகுதியில் சாரதி தேர்ச்சிபெற்றவர் ஆகியவையாகும்.

வயது 18- 45இற்கு உட்பட்ட விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தவிசாளர், தேசிய அருங்கலைகள் பேரவை ஜனகல கேந்திர கட்டடத்தொகுதி, பத்தர முல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பும் போது கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப்பெயர் குறிப்பிடல் வேண்டும். (105)

# சிகிச்சைக்கு நிதியுதவி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாற்று ஆற்றலுடைய ஜெ.எழிலரசன் என்ற சிறுவனுக்கு மாதாந்தம் சிகிச்சை பெறுவதற்கான இவ் வருட போக்குவரத்து செலவாக 7 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள இக்கொடுப்பனவு விரைவில் இச்சிறுவனுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், குறித்த பயனாளியை கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (18)

# மதுபானசாலைக்கு கல்வீச்சு

(வரணி)

வரணி பொதுச்சந்தை அருகே அமைந்துள்ள மதுபானசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏழு மணியளவில் கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் பற்றித் தெரியவருகையில்,

சுமார் ஏழுமணியளவில் மது அருந்தியவர்களுக்கிடையில் வாய்த் தகராறு ஏற்பட்டதாகவும் பின்பே கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# முரசின் இன்றைய பலன்



(04.11.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி.
மரணயோகம் பிரதமை விசாகநட்சத்திரம் முன்இரவு 11.29 வரை
இராகுகாலம 07.34- 09.04 வரை. சுபநேரம 12.04- 01.34 வரை.
கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** கடன்மூலம் பணம் பெற்றவருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யமுஸ்தீபு, அன்னையின் சொற்கேட்டு தாரத்தை விலக்குவதால் விவாகரத்துப்பெற முயலுதல்.

**ரிஷபம்** நீண்டகாலப் பொழுதாக மனதை வருத்திய நிகழ்வு சுலபமாக முடிவடைதல், சமரசமுயற்சிக்கு பலதடவை முயன்றும் தோல்வி கண்டதால் பிரிந்து செல்ல உறுதி செய்தல்.

**மிதுனம்** ஒப்பந்தங்களால் பாரிய நட்டம் ஏற்பட்டு வருவதினால் கடன்படும் நிலைக்கு தள்ளப்படல், மக்களின் செய்கையால் சமூகத்தில் இருந்துவரும் மதிப்பு கெட்டு போகும் நிலை தக்கவைத்தல்.

**கடகம்** உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தாமதமேற்பட்டதால் மரணபயம் பீடித்தல், நட்டத்தில் சென்று கொண்டிருந்த வியாபாரம் புதிய யுக்தியால் இலாபநோக்கில் திசை திரும்பல்.

**சிம்மம்** அதிகாரிகளின் ஆவணப்போக்கினால் மாற்றலாகிச்செல்ல விழைதல், தனிவழிசென்று ஆபத்தில் சிக்கவைக்கும் நிலையில் சமயோசித புத்தியினால் தப்பிப் பிழைத்தல்.

**கன்னி** உங்கள் மீது ஏற்பட்ட தப்பான அபிப்பிராயம் நீங்கும் வகையில் நடக்கமுற்படுதல், நட்டமேற்பட காரணமாக இருக்கும் விடயங்களில் கவனஞ்செலுத்தியதால் தொழில் மேன்மையுறல்.

**துலாம்** எதிர் மனப்பாங்கு உள்ளவரால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தொல்லைகளை முறியடிப்பீர். வெளியூர் செல்லும் எண்ணப்பாங்கினை தற்காலிகமாக கைவிட்டுவிடல்.

**விருச்சிகம்** பிறருக்கு எந்த விதமான உறுதிமொழி அளிக்காதிருத்தல் நன்றாகும். செய்தபிழைக்கு பிராயச்சித்தமாக மன்னிப்புக்கோரியதால் ஆபத்தினின்றும் விலகுதல்.

**தனுசு** பிள்ளைகளின் நியாயமான கருத்திற்கு மதிப்பைக் கொடுத்ததால் முரண்பாடு விலகிச்செல்லல், நண்பனின் பசப்பு வார்த்தையை நம்பி உள்ளதையும் இழந்து போகலாம்.

**மகரம்** இல்லறத்துணையின் எதிர்பார்ப்பினை இயன்ற வரை பூர்த்திசெய்யமுன்வரல், இடம் சூழ்நிலை உணர்ந்து பேச்சைக் கொடுப்பதினால் பிறரின் மதிப்புக்கும் பாராட்டுதலுக்கும் உள்ளாகுதல்.

**கும்பம்** செய்யுந் தொழிலை தெய்வமென்றதால் வியாபாரம்களை கட்டல், விண்ணப்பித்திருந்த வங்கிக் கடன்பெற பச்சைக்கொடி காட்டுவதால் மகிழ்வுறல்.

**மீனம்** காணாமல் போனவர் பற்றிய பதிவுகளில் நம்பிக்கை இழத்தல், சம்மதம் பெறாமல் பொருளைத் திருடியதால் தண்டம் பெறல்.

# அரையிறுதி வாய்ப்பை இழந்தது யாழ். மாவட்டம்


படப்பிடிப்பு : ஆர். ராஜகுமார்

சங்காவுடன் யாழ். மாவட்ட அணி

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 தொடரில் ஓட்ட விகித அடிப்படையில் யாழ். மாவட்ட கூட்டு பாடசாலைகள் அணி வெளியேறியுள்ளது.

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 தொடர் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, மாங்குளம் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்,வவுனியா மகாவித்தியாலயம் ஆகிய மைதானங்களில் நடைபெற்று வருகின்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை முதல் போட்டியில் வவுனியா மற்றும் மன்னார் கூட்டுப் பாடசாலை அணிக்கும், யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலை அணிக்குமிடையில் இடம்பெற்றது. காலை பெய்த மழை காரணமாக 15 ஓவர்களாக இப்போட்டி இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வவுனியா-மன்னார் கூட்டுப் பாட-சாலை அணி 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கரிசூடன் 15, நிமலன், நிசாந் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் மூன்று, துவாரகசீலன், அஜித் டர்வின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலை அணி 6.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் யூலியர் கலிஸ்ரன் 27, துவாரகசீலன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக துவாரகசீலன் தெரி-வானார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலை அணியும், அநுராதபுரம் மத்திய கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலை அணி 18.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துவார-கசீலன் 26, விதுசன் 19, மதுஷன் 18, டினேசன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிமிந்தா மூன்று, நிசாந் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி 18.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சாந்தரசல் 30, அஜித் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன், அஜித் டர்வின் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டித் தொடரில் இரண்டு வெற்றிகளை யாழ்.மாவட்டகூட்டுப் பாடசாலைகள் அணி பெற்ற போதும் ஓட்ட விகித அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தது. இதேவேளை, யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலைகள் குழுவில்அங்கம் வகித்த கொழும்பு சென். பீற்றர்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இறுதிப்போட்டி நாளை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.,இ)

# சங்காவை நெகிழ வைத்த யாழ். இரசிகர்கள்



படப்பிடிப்பு : ஆர். ராஜகுமார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நேற்றைய தினம் மேற்கொண்ட இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவை யாழ். கிரிக்கெட் இரசிகர்கள், முண்டியடித்து அவரை கண்டுமகிழ்ந்ததுடன், முத்தமிட்டு நெகிழவைத்தனர்.

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் வடக்கின் பல பிரதேசங்களில் நடைபெற்று, வருகின்றது. இதில் நேற்றைய தினம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியின் போது இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார விசேட அதிதியாகக் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினார். மதியம் 1.30 மணியளவில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வந்தடைந்த சங்கக்காரவுக்கு யாழ். இரசிகர்கள் அணி திரண்டு வரவேற்றனர். சங்கக்கார வந்த செய்தி அறிந்த யாழ். இரசிகர்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரியை சூழ்ந்துகொண்டனர். அத்துடன் துடுப்பு, தொப்பி, கொப்பி ஆகியவற்றில் சங்கக்காரவின் கையொழுத்தை வாங்கியதுடன் புகைப்படம் பிடித்துக் கொண்டனர். இதே வேளை, இரசிகர்கள் அரவணைப்பில் திக்குமுக்காடி, மூழ்கித் திளைத்த சங்கக்காரவுக்கு யாழ். இரசிகர்கள் ஒருவர் முத்தமிட்டு நெகிழவைத்தார். (எஸ்.பி.,இ)




# நினைக்கவேயில்லை

(பெங்களூர்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வோம் என நினைத்துக்கூடப் பார்க்க வில்லையென இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

சிறப்பான தொடக்கம் இருந்தாலும் அடுத்தடுத்து 2, 3 விக்கெட்டுகள் வீழ்ந்ததால் நெருக்கடிக்கு உள்ளானோம்.

எப்படியும் 300 ஓட்டங்களைத் தொட வேண்டும் என்று ஆடினோம். ஆனால் 383 ஓட்டங்களைக் குவிப்போம் என்று நாங்கள், நினைத்துக் கூட பார்க்கவில்லை. ரோகித்சர்மா சிறப்பாக ஆடி-னார். இந்த மைதானம் சிக்சர்களுக்கும், பவுண்டரிகளுக்கும் பெயர் போனது. ஐ.பி.எல். போட்டியில் கெய்லும், ஹோலியும் விளாசியது இதற்கு ஒரு சான்று.

இந்தத் தொடரில் தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பாக ஆடினார்கள். நடு வரிசை துடுப்பாட்ட வீரர்கள் இன்னும் சிறப்பாக ஆடி ஓட்டங்களை சேர்த்திருக்கலாம்.

இந்திய அணியின் பந்துவீச்சில் முன்னேற்றம் தேவை. நாங்கள் 350 ஓட்டங்களை 2 முறை விரட்டிப் பிடித்துள்ளோம். ஆனால் யாரும் அவுஸ்ரேலிய பந்து வீச்சை பற்றி பேசவில்லை. அவுஸ்ரேலிய அணியும் சிறப்பாக ஆடியது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, தோல்வி குறித்து கருத்துத் தெரிவித்த அவுஸ்ரேலிய கப்டன் பெய்லி, இந்தப் போட்டியில் வெற்றிக்கனியைப் பறிக்க நெருங்கிய போதிலும் அடுத்தடுத்து விக்கெட்டுகள் விழுந்தன. போல்க்னரும், மைக்ஸ் வெலும் சிறப்பாக விளையாடினர்.முதல் நிலை அணியுடன் மோதுவது கடினம் என்பது எங்களுக்கு தெரியும். என்றாலும் இந்த தொடர் அருமையாக இருந்தது என்றார்.

## போட்டுத் தாக்கியது பங்களாதேஷ்

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் 'அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று பங்களாதேஷில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில்' களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெய்லர் 107 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அப்துர் ரசாக் ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

பதிலுக்கு 308 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 49.2 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எஸ். ரஹ்மான் 96, நசீர் உசைன் ஆட்டமிழக்காது 44, என். இஸ்லாம் 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் என். மக்கலம் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது.

## அதிக சிக்ஸர்; ரோகித் சாதனை

(பெங்களூர்)

ஒரு நாள் போட்டியில் ஒரு ஆட்டத்தில் அதிக சிக்சர் அடித்த வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்தார். அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அவர் 16 சிக்சர்கள் அடித்து வாண வேடிக்கை நிகழ்த்தினார். இந்த 16 சிக்சர்கள் மூலம் அவர் வட்சனின் சாதனையை முறியடித்து புதிய சாதனையை படைத்தார்.

2011ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய வீரர் வட்சன், பங்களாதேஷ் அணிக்கு எதிராக 15 சிக்சர்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. இதை ரோகித் சர்மா முந்தினார்.

ரோகித் சர்மா அதிகபட்சமாக மெக்காய், டோசர்ட்டி ஆகியோரின் ஓவர்களில் தலா 5 சிக்சர்கள் அடித்தார். மைக்ஸ் வெல்லுக்கு 3 சிக்சரும், போல்க்னெருக்கு 2 சிக்சரும், கோல்டருக்கு ஒவருக்கு ஒரு சிக்சரும் அடித்தார்.

அதிக சிக்சர் அடித்த முதல் ஐந்து வீரர்கள் வருமாறு:

ரோகித் சர்மா (இந்தியா) 16 சிக்சர். அவுஸ்ரேலியாவுக்கு எதிராக (பெங்களூர்).

2. வட்சன் (அவுஸ்ரேலியா) 15 சிக்சர் பங்களாதேஷிற்கு எதிராக (டாக்கா).

3. மார்ஷல் (மே.தீவுகள்) 12 சிக்சர். கனடாவுக்கு எதிராக (சிங்சிட்டி).

4. ஜெய்சூர்யா (இலங்கை) 11 சிக்சர். பாகிஸ்தானுக்கு எதிராக (சிங்கப்பூர்).

5. அப்ரிடி (பாகிஸ்தான்) 11 சிக்சர்.இலங்கைக்கு எதிராக (நைரோபியா).





இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி குருநாகல் இப்கமுக மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் பெந்தோட்ட காமினி மகாவித்தியாலய அணியும் மோதின. போட்டி ஆரம்பமாகி 15 ஓவர்கள் நிறைவில் கனமழை பெய்தமையால் இணைச் சம்பியன்களாக இரு அணிகளும் தெரிவு செய்யப்பட்டன. இதில் இரு அணித் தலைவர்களும் கிண்ணத்தை பெற்றுக்கொள்வதையும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியினர் பயிற்றுநர் லவேந்திராவுடன் நிற்பதையும் காணலாம். (48)

விளையாட்டுச் செய்திகள்

## ஜெயதர்சன் சதம், பானுசுதன் சிறப்பு பந்துவீச்சு

# மத்திய கல்லூரி இனிங்ஸ் வெற்றி

(பருத்தித்துறை)

ஜெயதர்சன், பானுசுதன் ஆகியோரின் துடுப்பாட்டம், பந்து வீச்சு கைகொடுக்க யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்றுஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 30ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய ஹாட்லிக்கல்லூரி அணி, பானுசுதனின் பந்து வீச்சுக்குஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத் தது. இறுதியில் ஹாட்லிக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 21.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிநாத் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பானுசுதன் ஆறு ஓவர்கள் பந்து வீசி ஒன்பது ஓட்டங்களைக்கொடுத்து ஏழு விக்கெட்டுக்களையும், மதுஷன் இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, ஜெயதர்ஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 52 ஓவர்களை எதிர்கொண்டு ஏழு விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ஜெயதர்சன் 190 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றார். 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மாவட்ட வீரரால் இந்த வருடம் அடிக்கப்பட்ட முதல் சதமாக இது அமைந்தது. மற்றும் மதுஷன் 48, ராஜ்கிளிங்டன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜேந்திரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

174 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய ஹாட்லிக் கல்லூரி அணி பானுசுதன், அனஸ்ராஜ் ஆகி யோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மீண்டும் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஹாட்லிக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 110 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பிவுலன், சங்கீதன் தலா 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பானுசுதன், அனஸ்ராஜ் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)



ஜெயதர்சன்



பானுசுதன்

### அரச அதிபர் சதுரங்கம்

## இரு பிரிவுகளில் ஊர்காவற்றுறை சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண சதுரங்கப் போட்டியில் இரு பிரிவுகளிலும் ஊர்காவற்றுறை பிர தேச செயலகம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. யாழ். மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில்நடாத்தப் பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண சதுரங்கப் போட்டி கடந்த 31ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

ஆண், பெண் என இரு பிரிவுகளாக இடம்பெற்ற இப்போட்டி குழுப் போட்டியாக இடம்பெற்றது. ஒரு குழுவில் ஆறு பேர் அங்கம் வகித்தனர்.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும், இரண்டாமிடத்தை மாவட்டச் செயலக அணியும், மூன்றாமிடத்தை வேலணைப் பிரதேச செயலக அணியும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஊர்காவற் றுறை பிரதேச செயலக அணியும், இரண்டாமிடத்தை யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும், மூன்றாமிடத்தை நல்லூர் பிரதேச செயலக அணி யும் பிடித்துக் கொண்டன. (எஸ்.பி.)

# விபுலானந்தன் கிண்ணம் இந்துக்கள் வசம்



பொன் விபுலானந்தன் வெற்றிக் கிண்ணத்தை யாழ். இந்துக்கல் லூரி மற்றும் இந்து மகளிர் கல்லூரி அணிகள் கைப்பற்றிக் கொண்டன. யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை அலியான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் பொன் விபுலானந்தனின் 27ஆவது ஞாபகார்த்தமாக நடாத்திய கூடைப்பந்தாட்டத்தின் இறுதிப்போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 30ஆம் திகதி மாலை முதல் இடம்பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதின. ஆரம்பத்தில் யாழ். மத்திய கல்லூரி புள்ளிகளைப் பெற்றாலும் தொடர்ந்து சுதாகரித்து ஆடிய யாழ். இந்துக் கல்லூரி போட்டியின் அரைப்பாதிக்குப் பின்பாக தனது கட்டுப்பாட்டில் கொணர்ந்தது. இறுதியில் 68:53 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் பொன். விபுலானந்தன் ஞாபகார்த வெற்றிக்கிண்ணத்தை தன் வசப்படுத்தியது. போட்டியின் சிறப்பாட்டக்காரனாக யாழ். இந்துவின் கௌரிசங்கர் தெரிவானார். பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. இறுதியில் 42:31 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகியது. (48,93)

# உங்கள் நண்பர்களை உங்களுக்கு நெருக்கமாக வைத்திருங்கள்

- கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து.



இந்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் சந்திக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளாது பிரதமர் மன்மோகன்சிங் விலகியிருப்பாரானால் அது இலங்கையை மட்டந்தட்டும் ஒரு விடயமாக மட்டும் கருதப்படாது, ஆனால் தனது சொந்த சுற்றாடலில் உள்ள டில்லியின் மென்மையான அதிகாரத் திட்டங்களை அது பாழ்படுத்துவதுடன் இந்தியாவின் நலன்களுக்கு கேடு உண்டாவதையும் நிரூபிக்கும்.

வடக்கு மகாணசபையை மீளச் செயற்படுத்தும் முயற்சியில் இப்போதுதான் இந்தியா ஒரு தனி சாதனையை ஏற்படுத்தியுள்ளது. அது ஒன்றே போதும், புது டில்லிக்கு அதன் தலைவர் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் சந்திக்கும் மாநாட்டில் கலந்து கொளவதற்கு எதிராக போராடும் தமிழ் நாட்டின் அழுத்தத்தை தணிக்க.

அது அப்படிச் செய்யத் தவறினால் அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கும் விடயத்தில் கொழும்பை முன்னோக்கி நகர்த்துவதற்கான இந்தியாவின் தகுதியையும் அது குறைத்துவிடும் - அப்போது இலங்கையின் முக்கியமான கண்ணோட்டத்தில், அரசுக்கு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வடக்கில், வடமாகாணசபைக்கு தேர்தல்களை நடத்தி ஒரு நிருவாகத்தை நிறுவிய இந்தியாவின் ஆபத்தான நகர்வு இந்தியப் பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் பிரசன்னமாக இருக்காவிட்டால் அதிகமானளவு கவனத்தை ஈர்க்காமல் போய்விடலாம்.

அதிகாரப்பகிர்வு விடயத்தை முன்னோக்கி நகர்த்துவதன் மூலம் சிறிதளவாவது பலன் பெறுவதே இந்தியாவுக்கு முக்கியமானதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், வடக்கு மாகாணசபை மீண்டும் நிறுவியது மூலம் கொழும்பை பொறுத்தவரை என்ன நன்மை கிடைக்கப்போகிறது என இலங்கை அரசாங்கம் நினைக்கவும் முடியும்.

தனக்கு அயலில் நடக்கும் ஒரு நிகழ்வில், அவரது விமர்சகர்கள் உட்பட்ட ஏனைய அயலவர்கள் கலந்து கொள்ளும்போது அவர் இல்லாத ஒரு காட்சி பிரத்தியேகமாக தெரியும். ஒரு சக்திமிக்க நாடான இந்தியா அண்டை நாடுகளுடன் நல்ல பழக்கம் மற்றும் உணர்வுகளை கடைப்பிடிப்பதில் குறைபாடு கொண்டிருப்பதுடன், சிறிய அயல் நாடுகளை உணர்வற்ற விதத்தில் காயப்படுத்தி தற்பெருமை கொள்கிறது என்கிற ஒரு எதிர்மறையான கண்ணோட்டத்தையும் வலுப்படுத்தும், ஆனால் அதே நேரத்தில் அதன் உப பிராந்திய அழுத்தங்களை அது தீர்க்காவிட்டால் அதன் வெளியுறவுகளை உருவாக்குவதில் அது பலவீனமடைந்துவிடும்.

தமிழ் நாட்டில் உள்ள தமிழ் உணர்வு இலங்கையில் உள்ள சிங்கள உணர்வை விட நியாயமானதோ அல்லது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ இல்லை. எனவே இந்தியாவின் ஒரு அரை அதட்டல் அதன் அண்டைத் தீவில் வாழும் பெரும்பான்மை மக்களின் மத்தியில் எடுபடாது, ஆனால் இந்தியா பற்றிய ஒரு எதிர்மறை அம்சமாக விருப்பும் வெறுப்பும் கலந்த ஒரு உணர்வு அந்த மக்களிடையே வலுப்பெறும்.

நிச்சயமாக இந்தியா அளவில் பெரியதும், பலம் வாய்ந்ததும், மற்றும் அதன் அயலவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்காமல் அலட்சியம் செய்யக்கூடியது என்பதும் மறுக்கமுடியாத உண்மைகள், எனினும் வியட்னாவுடனான உறவு, சீனாவுக்கு முற்றிலும் பொருத்தமற்றதாக இருக்கமுடியாது, அல்லது மெக்சிக்கோ அமெரிக்காவுக்கு பொருத்தமற்றதாகவும் இருக்கமுடியாது. இரண்டு உறவுகளிலும் சிறிய அதிகார சக்தியை பொறுத்தமட்டில் சந்தேகமுள்ள ஒரு வரலாறு உள்ளது.

மிகச் சிறிய நாடான இலங்கையை பொறுத்தமட்டில் அது வியட்னாம் அல்லது மெக்சிக்கோ என்பனவற்றின் தரத்துக்கு கனமுள்ள நாடாக இல்லை, ஆனால் கியூபாக்கு அதிகமாக அமெரிக்கா செய்ததைபோல, இந்தியாவும் இலங்கையை, முட்கள் நிறைந்த ஒரு முள்ளம் பன்றியைப் போலவே ஆக்கிவிடும். இது கொழும்பின் விடயத்தில் டில்லி பயன்படுத்திவரும் மென்மையான அதிகாரச் சமன்பாட்டை முற்றாக கைவிடவேண்டிய முக்கியமான ஒரு நிலையை உருவாக்கும்.

சில வருடங்களுக்கு முன்னர் அதன் அயலவர்களுடன் ஏற்பட்ட உராய்வின் பின்னர், சீனா தனது உடனடி சுற்றாடலில் உள்ளவர்களுடன் எப்படி நடந்துகொள்ளவது என்பதன் முக்கியத்தை மேலும் தெளிவாக அறிந்துள்ளது. இலங்கையை தனிமைப் படுத்துவதன் மூலமாக தெற்காசியாவில் இந்தியா தனது மென் அதிகாரத்தை இழப்பது புறக்கணிக்கத்தக்கது அல்லது குறுங்காலத்துக்கே இருக்கக்கூடியது என்று ஒதுக்கிவிட முடியாது. அயல்பக்கத்தில் போட்டிக்கான இடம் காலியாகத்தானே இருக்கிறது என்று அலட்சியப்படுத்தாமல் இதன் பின்விளைவுகளையும் மற்றும் காட்சியையும் பற்றி மீளச் சிந்திப்பது அவசியம்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமரின் வருகையோ அல்லது வராமலிருப்பதோ, மற்றும் 2014 ஜநா மனித உரிமைகள் சபை அமர்வுகளில் ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான இந்தியாவின் வாக்கு, என்பன முக்கியமான துருப்புச் சீட்டுகள் அவற்றை வீணாக விரயம் செய்யக்கூடாது. "ஒரு முறை நீங்கள் உங்கள் கடைசிச் சீட்டையும் விளையாடித் தீர்த்து விட்டால், பிறகு இனி மேலும் அது உங்களிடம் இருக்காது" என்று றொனால்ட் ரீகன் எச்சரிக்கை செய்திருப்பதைப்போல அவதானமாகச் செயற்படவேண்டும். இலங்கையை இழப்பதினால் மாத்திரம் இந்தியா தீவிலுள்ள தமிழ் சிறுபான்மையினருக்கு வேண்டியதை அடைந்துவிட முடியாது. இலங்கையைப் பற்றிய இந்தியாவின் கொள்கைகள் மதராஸ் கபேயில் உருவாக்கப்பட்டு வருவதைப்போல தோன்றக் கூடாது.

# பிழையின்றித் தமிழ் 54

**- ஞானச்செல்வன் -**



"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

நன்னூல் நூற்பா (சூத்திரம்) ஆதலின் மொழி இலக்கணக் கட்டுப்பாடுகளிலும் காலத்திற்கேற்ப சில பழைய விதிகளைத் தளர்த்தியும், புதியவற்றை ஏற்றதும் உண்டு என அறிக.

டென்மார்க் நாட்டை இடென்மார்க் என்று எழுதுதல் சரியா?

மொழி முதலாக வரும் எழுத்துகள் பற்றித் தொடரின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். ட, ர, ல எழுத்துக்களை முதல் எழுத்தாகக் கொண்ட தமிழ்ச் சொல் இல்லை. ஆனால் பிறமொழிச் சொற்களை எப்படி எழுதுவது? அரங்கசாமி, இராமன், இலக்குவன், உலோபி என்று அ, இ, உ - க்களை முதலில் இணைத்து வழங்குவது தமிழில் வழக்கம்.

டங்கன் துரை என்ற பெயரை இடங்கன் துரை எனலாமா? எல்லீஸ் ஆர். டங்கன் என்ற திரைப்பட இயக்குநர் ஒருவரின் பெயரை எல்லீஸ். ஆர். இடங்கன் என எழுதலாமா? டென்மார்க் எனும் நாட்டை இடென்மார்க் என்று எழுதுதல் சரியா? டயர் என்பான் பெயரை இடயர் எனலாமா?

"ர" விலும் அப்படியே; ரப்பர் எனும் ஆங்கிலச் சொல்லை இரப்பர் என்று எழுதுதல் சரியா? இரப்பர் என்ற தமிழ்ச் சொல் (யாசிப்பவர்) உள்ளதே. ரம்பம் என்பதை இரம்பம் என்றெழுதலாமா? ரவை, ரவா(உணவுப்பொருள்) இதனை இரவை, இரவா என்றெழுதினால் வேறு பொருள் தரும் தமிழ்ச் சொல் ஆகிறதே!

லம்பாடி, லப்பை எனும் சொற்களை இலம்பாடி, இலப்பை எனல் சரியா? லட்டு - இலட்டுவா? சிந்தித்தால் பிறமொழிச் சொற்களில் இம்மூன்றையும் முதலெழுத்துகளாக ஏற்பதில் தவறில்லை எனத் தோன்றுகிறது.

மொழி முதல் எழுத்துப் பட்டியலில் "ங" இடம் பெற்றுள்ளது. "ங" இப்போது எந்தச் சொல்லில் மொழி முதல் எழுத்தாக வருகிறது? அங்ஙனம், இங்ஙனம் என அ, இ சேர்த்து வழங்குகிறோம்.

"ஞ"கர வரிசையிலும் ஞ, ஞா, ஞி, ஞெ, ஞொ இந்த ஐந்து மட்டுமே பழைய காலத்திலும் மொழி முதல் எழுத்தாக வந்துள்ளன.

(எ-டு) ஞமலி (நாய்), ஞாலம் (உலகம்), ஞிமிறு (வண்டு), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞொள்கல் (இளைத்தல்). ஆயினும் "ஞ" மொழி முதலில் வாராது என விட்டுவிடல் தவறு. ஞாலம், ஞமலி போன்ற அருஞ்சொற்களை இழக்க நேரிடும்.

அதனால், முடிவாக நாம் மொழி முதல் எழுத்தாக வருவன பற்றி எழுதுகிறோம். மனத்திற் கொள்க.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் (அ முதல் ஔ முடிய) சொல்லின் முதல் எழுத்தாக வரும். (அம்மா, ஆடு, இலை, ஈட்டி எனக் கண்டு கொள்க).

மெய்யெழுத்துகள் பதினெட்டும் மொழி முதல் வாரா என முன்னரே அறிவீர்கள். உயிர் மெய் எழுத்துகளில், க, ச, ஞ, ட, த, ந, ப, ம, ய, ர, ல, வ என்னும் பன்னிரண்டும் இவற்றின் பெருக்கமும் (வர்க்கமும்) (க, கா, கி, கீ, கு, கூ எனத் தொடர்ந்து வருவன) எனத் தெளிக. ட வையும் ஏ வையும் ல வையும் இவர் எப்படிச் சேர்க்கலாம் என எம்மீது எவரும் சீற்றம் கொள்ள வேண்டாம். தமிழ்ப் பேரறிஞர் அ.கி.பரந்தாமனார் அவர்களே ஐம்பதாண்டுகள் முன்னர் எழுதியுள்ளார்கள்.

இவை இருக்கட்டும். இப்போது புதிதாக "ஜொள் விடுறான்", "லுக் விட்டான்", "கிராக்கி", "கட்டை" போன்ற பல சொற்கள் இன்று தமிழ்ப் பேச்சு வழக்கில் புழக்கத்தில் உள்ளன. "சரியான மொக்கை" (ஒன்றுக்கும் ஆகாதது - உருப்படாதது எனப் பொருளாம்) இந்தத் தமிழ்ச் சொற்களை எவர் கண்டுபிடித்தார்களோ? இவ்வழக்குச் சொற்களை எழுத்தில் (நூல்களில்) சேர்த்துவிட்டால் வரப்போகும் நம் வழிமுறையினர் (சந்ததியர்) தமிழின் தரத்தைக் குறைத்தே மதிப்பிட வேண்டி வரும். அருள் கூர்ந்து, எழுத்தில் "தவிர்ப்பன தவிர்த்தல்" கடைப்பிடியுங்கள்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர் அன்னெல் சைமென். 31 வயது பெண்ணான இவரை, அவரது பக்கத்து வீடுகளில் வசிப்போர், சற்று மிரட்சியுடன் பார்க்கின்றனர். நாய், பூனை, கிளி, முயல் போன்றவற்றை, செல்லப் பிராணியாக வளர்ப்பது வழக்கமானது தான். ஆனால், இந்தப் பெண், 120 கிலோ எடையுள்ள ஒரு சிங்கத்தை, செல்லப் பிராணியாக வளர்த்து வருகிறார். இந்த சிங்கமும், இவருடன் செல்லமாக விளையாடுகிறது.

குழந்தையைப் போல், சிங்கத்தை கையாளுகிறார். மற்றவர்களைப் பார்த்தால் சிலிர்ப்பு காட்டும் இந்த சிங்கம், சைமெனை பார்த்தால் மட்டும் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுகிறது. இந்த சிங்கம் பிறந்து 18 மாதம் தான் ஆகிறது. பிறந்ததிலிருந்தே சிங்கத்தை இவர் தான் வளர்த்து வருகிறார். ஆரம்பத்தில், தன் வீட்டில் வைத்து தான் சிங்கத்தை வளர்த்து வந்தார். ஆனால், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் புகார் தெரிவித்ததால், ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் உள்ள தன் கெஸ்ட் ஹவுசில் வளர்த்து வருகிறார்.

இந்த சிங்கத்துடன் சேர்த்து ஒரு நாயையும் வளர்க்கிறார். தினமும் காலையில், சிங்கத்தையும், நாயையும் ஜோடியாக அழைத்துக் கொண்டு நடைப் பயிற்சி போவதையும், வழக்கமாக வைத்திருக்கிறார். இந்த சிங்கத்துக்கு, டிம்பா என பெயர் வைத்து செல்லமாக அழைக்கிறார். சைமென் கூறுகையில், "சிங்கத்துடன் விளையாடுவது, ஜாலியாகத் தான் இருக்கிறது. ஆனால், அதன் சாப்பாட்டுக்குத் தான் அதிகமாக செலவிட வேண்டியிருக்கிறது. அதற்குத் தேவையான இறைச்சிகளை வாங்கியே என் சொத்து காலியாகி விடும் போலிருக்கிறது..." என, கூறி சிரிக்கிறார்.







கடலுக்கு கரிப்புத் தன்மை இருப்பது எதனால் தெரியுமா?

கடலுக்குள் வந்து சேரும் நதிகளும், ஓடைகளும், உப்புச் சத்தை பாறைகளிலிருந்தும், பூமியின் மேல் பரப்பிலிருந்தும் சிறுகச் சிறுக அடித்து வந்து, கடலில் சேர்ப்பதால்தான். கடல் நீர் ஆவியாக மாறி, மீண்டும் மழையாகப் பொழிகிறது. உப்பு மட்டும் கடலிலேயே, தங்கி விடுகிறது!

கடலுக்கு நீல நிறம் கொடுப்பது வானம் தானே? வானம் நீலநிறமாக இருப்பதால் தானே கடல் அதை பிரதிபலிக்கிறது... என்று எண்ணுகிறீர்களா?

இல்லையில்லை... கடலுக்கு நீல நிறம் கொடுப்பது சூரியன்தான். உண்மையில் கடல் நீர் நிறமற்றது. சூரியனிலிருந்து வெளிப்படும் பல நிற ஒளிக்கதிர்களுள், நீல நிறத்தை தவிர மற்ற அனைத்தையும் கடல் கிரகித்துக் கொள்கிறது. நீலநிறக் கதிர்கள் மட்டும் கடலால் எதிரொளிக்கப்படுவதால், அது, நீலநிறமாகத் தோன்றுகிறது!

சந்திரனுக்கும், கடல் கொந்தளிப்புக்கும் சம்பந்தம் இருக்கிறதா?

ஆமாம்... முழு நிலவின் ஈர்ப்பு சக்தியால், கடல் நீர் எழுச்சியடைந்து மேலெழும்புகிறது. அதே போல், உலகின் பூமிப் பகுதியும் கொந்தளிக்கிறது. பூமியின் நிலப்பரப்பு, சில சமயங்களில் ஆறு அங்குலம் கூட எழும்பு, மீண்டும் அடங்குகிறதாம். உலகப்பரப்பில் 70 சதவிகிதம் தண்ணீர் தான். ஆனால், இதில் ஒரு சதவிகிதம் தான் குடிக்க லாயக்கானது.

ஜேர்மனியில் உள்ள ஹெமல் ஸ்டார் பர் என்ற ஏரியின் மேல் பகுதி நீர் இனிப்பாகவும், அடிப்பகுதி நீர் கசப்பாகவும் இருக்கும். அதனால், இதற்கு, sea of matrimony என்று பெயர். matrimony என்ற ஆங்கில வார்த்தைக்கு, மண வாழ்க்கை என்று பொருள்...

# எஸ்.வி.ஆர்.

**– ரவிக்குமார் –**

தோழர் எஸ்.வி.ஆர் ஒரு அபூர்வமான மனிதர். இப்போது அவரைப் போன்றவர்கள் அருகிவிட்டனர் என்றே சொல்லவேண்டும். அவரளவுக்கு விரிந்த படிப்பு கொண்டவர்கள் புரிதல் கொண்டவர்கள் இன்றைய தலைமுறையில் இல்லை. செயல்பாட்டிலும் அவர் பலவற்றுக்கு முன்னோடி. தமிழ்நாட்டின் மார்க்சிய லெனினிய இயக்கத்தின் வரலாற்றை எழுதினாலும், திராவிட இயக்கத்தின் வரலாற்றை எழுதினாலும், மனித உரிமை இயக்கத்தின் வரலாற்றை எழுதினாலும் அவரைத் தவிர்த்துவிட்டு அவற்றை எழுதமுடியாது. தமிழில் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தியதிலும் அவரளவுக்கு இன்னொருவரை நாம் குறிப்பிடமுடியாது. உத்தரவாதமான வருமானமோ, ஆரோக்கியமான உடல்நிலையோ இல்லாத இன்றைய நிலையிலும் அவர் தனது சமூகப் பொறுப்பை உணர்ந்து அயராமல் எழுதிக்கொண்டிருக்கிறார்.

ஆழ்ந்த விமர்சனப் பார்வை கொண்டவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படமாட்டார்கள் என்ற பொதுவான இலக்கணத்துக்கு நேரெதிரானவர் தோழர் எஸ்.வி.ஆர். அவர் அன்பு காட்டும்போது நமக்கு அம்மாவின் நினைவு வரும். அவர் கோபப்படும் போது நமக்கு நம் குழந்தையின் ஞாபகம் வரும். குழந்தையைப் போலவே வீம்பும் பிடிவாதமும் கொண்டவர்.

பேராசிரியர் அ.ராமசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளியான ஊடகம் என்ற சிற்றிதழில் யர்மோலா என்ற கற்பனையான சிந்தனையாளருடன் ஒரு நேர்காணலைப் பதிவுசெய்து வெளியிட்டிருந்தோம். அதில் பெரும்பாலான பகுதிகளை நான் எழுதியிருந்தேன். மிஷேல் ஃபூக்கோவை மனதில் வைத்து, மார்க்ஸியம் மீதான சில கருத்துகளை அதில் பதிவுசெய்திருந்தேன். அவரை உண்மையான பாத்திரமெனக் கருதிக்கொண்டு தோழர் எஸ்.வி.ஆர் என்னிடம் கடுமையாக சண்டைபோட்டார். "யார் அந்த முட்டாள் கிழவன்? கண்டபடி உளறியிருக்கிறான். வெளிநாட்டுக்காரனென்றால் யாரிடம் வேண்டுமானாலும் பேட்டி எடுப்பதா?" என்று கடிந்துகொண்டார். மார்க்ஸியத்தை ஆதரித்து அவர் வெளிப்படுத்திய சீற்றத்தை நான் மிகவும் மதித்து ரசித்தேன்.

சென்னையில் மிகவும்



தோழமையோடு நான் அணுகிப் பேசக்கூடியவராக இருந்தவர் தோழர் எஸ்.வி.ஆர் மட்டும்தான். வீட்டுக்குப் போன நேரங்களில் அவரே தயாரித்து அளிக்கும் தேநீரின் சுவை இன்னும் நாவில் இருக்கிறது. அவரோடு பழகிய எவரும் அவரது விருந்தோம்பலை நினைவுகூராமல் இருக்கமாட்டார்கள். வயது வித்தியாசம் பாராமல் என்னிடம் தோழமை பாராட்டிய எஸ்.வி.ஆர் நான் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரியாரியம் குறித்து விமர்சிக்க ஆரம்பித்ததும் என்னோடான உறவை முற்றாகத் துண்டித்துக்கொண்டுவிட்டார். பெரியார் குறித்து ஆய்வு நூல்களை எழுதினாலும் அடிப்படையில் அவரை ஒரு மார்க்ஸியவாதி யென்றே நான் கருதியிருந்தேன். அதனால் அவரது கோபம் எனக்கு வியப்பாக இருந்தது. நானும் வீம்பாக அவரோடு தொடர்புகொள்ளாமல் இருந்துவிட்டேன். பல ஆண்டுகள் கழித்து சில மாதங்களுக்கு முன்னர் அவரோடு மீண்டும் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். இடையில் இத்தனை ஆண்டுகள் தொடர்பற்று இருந்த எண்ணமே எழாதபடி இருந்தது அவரது பேச்சு.

தோழர் எஸ்.வி.ஆரை மீண்டும் எப்போது சந்திப்பேன் எனத் தெரியவில்லை. இப்போது நினைத்துப் பார்க்கும்போது அவரைப் பற்றிய நல்ல நினைவுகள் மட்டுமின்றி அவரது நல்ல பண்புகள் சிலவும் என்னிடம் படிந்திருப்பதாகத் தோன்றியது. அது உண்மையாக இருக்குமேயானால் அதற்காக நான் அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

இந்தக் குறிப்பை எழுதும்போது அ.மார்க்ஸின் நினைவு குறுக்கிடுகிறது. இதை ஒருவேளை அவர் படிக்க நேர்ந்தால் நிச்சயம் ஒருசில நொடிகளேனும் நெகிழ்ந்துபோவார் என நம்புகிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் எஸ்.வி.ஆருக்கு இதய அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது நிறப்பிரிகை சார்பில் நாங்கள் இருவருமாகக் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை நண்பர்கள் சிலருக்கு அனுப்பினோம். ஒரு சிறு தொகையைச் சேர்த்து அதை தோழர் வ.கீதா மூலமாக அவரிடம் சேர்ப்பிக்கச் சொன்னோம். எஸ்.வி.ஆரின் நண்பர்கள் பலர் பெரிய உதவிகளைச் செய்ய முன்வந்தபோது அதை ஏற்க மறுத்துவிட்டதாகவும் நிறப்பிரிகை சார்பில் அளிக்கப்பட்டதை மட்டும் ஏற்றுக்கொண்டதாகவும் கீதா என்னிடம் சொன்னார். அவர் எங்கள்மீது வைத்திருந்த அன்பின் வெளிப்பாடாக இருந்தது அது. அந்த நேரத்தில் அவர் ஆஞ்சியோ சிகிச்சையோடு குணமாகித் திரும்பிவிட்டார்.

எஸ்.வி.ஆர், அ.மார்க்ஸ் முதலானவர்களோடு எனக்கு இப்போதும் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால் வேறுபாடுகளைவிட ஒற்றுமைகளே அதிகம் எனத் தோன்றுகிறது. சமூகத்துக்குக் கேடு விளைவிக்க விழையும் வலதுசாரி சக்திகள் தமக்குள் எவ்வளவு முரண்பாடுகள் இருந்தாலும் சேர்ந்து செயல்படுகிறார்கள். ஆனால் சமூக மேம்பாட்டை விரும்புவோரிடம் அத்தகைய ஒற்றுமை இல்லாமல்போய்விட்டது. புறச்சூழலின் அபாயத்தைக் கருதியேனும் அந்த ஒற்றுமை உருவாக்கப்படவேண்டும்.

சுவாமி விவேகானந்தரிடம் ஒருவர், "சுவாமி, எனக்கு ஒரே வரியில் ஓர் உபதேசம் செய்யுங்கள்" என்று வேண்டினார்.

அதற்கு அவர், "உன் அறையிலிருக்கும் எல்லாக் கதவு-களையும் திறந்து வை!" என்றாராம்.

கேட்டவருக்கு எதுவும் புரியவில்லை. சில நாட்கள் கழித்து மீண்டும் விவேகானந்தரைச் சந்தித்து, "சுவாமிகள் சொன்னது எனக்கு விளங்கவில்லை. புரியும்படிச் சொல்லுங்களேன்" என்றாராம்.

அதற்கு விவேகானந்தர், "உன் வீட்டுக் கதவுகள் திறந்திருந்தால் உன் பார்வை வெளியே செல்லும். மற்றவர்களின் துயரம் உன் கண்களில் படும். அவர்களுக்கு உன்னால் உதவ முடியும். அதே போல உன் உதவி தேவைப்படுபவர்கள் உன்னை நாடி உன் வீட்டுக்கு வர இயலும்" என்றார்.



# அப்பாஸ் கிராஸ்தமி, அகிரா குரசோவாவுடன் நிகழ்த்திய உரையாடல்

**ஜப்பானின் புகழ் பெற்ற இயக்குனரான அகிரா குரசோவா தன்னுடைய படங்கள் குறித்தும் அதிகம் பேசியதில்லை. தன்னுடைய சமகால இயக்குனர்களைப் பற்றியும் அதிகம் பேசியதில்லை. குரசோவா படங்கள் பற்றி டொனால்ட் ரிச்சி எழுதிய புத்தகம் மிகச்சிறப்பானது. ரிச்சி இதற்காக பல ஆண்டுகள் ஜப்பானிலே வாழ்ந்து ஜப்பானிய கலாசாரத்தை அறிந்து குரசோவா பற்றி எழுதியிருக்கிறார் திரைப்படங்கள் இதயத்தால் உணரப்பட வேண்டியவை. அதை மதிப்பீடு செய்து தர நிர்ணயம் செய்ய தனக்கு தெரியாது என்று எப்போதுமே அகிரா ஒதுங்கியிருந்திருக்கிறார். ஆந்த்ரே தார்கோவெஸ்கி, ஜான் கசவாடேஸ், சத்யஜித் ரே, அபாஸ் கிராஸ்தமி ஆகிய நால்வர் மட்டுமே அவரால் வெளிப்படையாக பாராட்டப்பட்டவர்கள். திரைப்பட விழாக்களிலும் நடுவரா்க கலந்து கொள்வதை பெரிதும் அகிரா குரசோவா விலக்கியே வந்தார். ஈரானின் புகழ்பெற்ற இயக்குனரான அபாஸ் கிராஸ்தமி 1993ஆம் ஆண்டு ஜப்பானிய திரைப்பட விழாவிற்கு நடுவராக சென்ற போது அகிரா குரசோவாவை அவரது வீட்டில் சந்திக்க அனுமதி கிடைத்தது. அதைப்பற்றி அப்பாஸ் கிராஸ்தமி ஈரானிய சினிமா இதழில் எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையின் எளிய தமிழ்வடிவமிது.**

00 00 00

டோக்கியோவில் உள்ள அகிரா குரசோவாவின் வீடு. அவரது மகள் கதவைத் திறந்து எங்களை வரவேற்றார். வீட்டின் ஒரு அறையினுள்ளிருந்து உயரமான, இளநீல உடையணிந்து அகிரா குரசோவா வெளிப்பட்டார். வயதான தோற்றம். வீட்டில் எப்போதும் அவர் விரும்பி அணியக்கூடிய ரீசேர்ட் அணியாமல் இன்று என்னைச் சந்திப்பதற்காகவே பவ்வியமான உடையை குரசோவா அணிந்திருப்பதாக தோன்றியது. மாடியில் இருந்த தனது படிப்பறைக்கு அவர் எங்களை அழைத்துக் கொண்டு சென்றார். அந்த அறையில் அவர் வாங்கிய ஒஸ்கார் விருது ஒரு பக்கம் கண்ணில் பட்டது. அறையில் அதிக அலங்காரங்கள் இல்லை. அகிராகுரசோவாவின் மனைவியின் படம், ஜப்பானிய மரபு ஓவியம் மற்றும் பூவேலைப்பாடு கொண்ட ஈரானிய பித்தளைத் தட்டு ஒன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. நிசப்தமான சூழல்.

நான் உங்களை கான்ஸ் திரைப்படவிழாவிலே பார்த்திருக்கிறேன் என்று குரசோவா பேச்சை துவக்கி வைத்தார். நானும் சிரித்தபடியே உங்களது மதோதயா திரைப்படம் திரையிடும் போது அங்கேயிருந்தேன். ஒரே நேரத்தில் உங்களையும் உங்கள் படத்தையும் காணும் சிறப்பு எனக்கு கிடைத்தது. ஈரானில் உங்களுக்கு எவ்வளவு புகழ் இருக்கிறது என்று உங்களுக்குத்தெரியாது. நீங்களும் ஹிட்ச்கொக்கும் தான் படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று பேதமில்லாமல் மக்களைக்கவர்ந்த திரைப்பட இயக்குனர்கள். உங்கள் படங்களை மக்கள் தேடித் தேடிப்பார்க்கிறார்கள். நீங்களும் தார்கோவெஸ்கியும் மட்டுமே ஈரானிய மக்களின் அறநெறிகள் மற்றும் பொது நம்பிக்கைக்கு மிக நெருக்கமாக இருக்கிறீர்கள். உங்களை சந்திக்க நேர்ந்ததை ஈரானிய மக்களின் சார்பில் நான் மிகுந்த சந்தோஷமாக உணர்கிறேன் என்றேன்.

அதைக் கேட்ட அகிரா குரசோவா அது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்பது போல தலையசைத்துவிட்டு தார்கோவெஸ்கி எனது நண்பர். மொஸ்கோ சென்றிருந்த போது அந்த நட்பு துவங்கியது. அவர் இறந்து போகும் வரை நெருக்கமான நண்பராகவே இருந்தார் என்று நினைவு கூர்ந்தார். சில நிமிச மௌனம் உருவானது. பிறகு அதிலிருந்து மீண்டு பேச துவங்கினார். என்னை ஈரானிய திரைப்பட விழாவிற்கு நடுவராக இரண்டு முறை அழைத்தார்கள். என்னால் திரைப்படங்களைப் பற்றி தீர்ப்பு கூற முடியாது. அத்துடன் இது போன்ற பயணங்களை நான் விரும்புவதுமில்லை. நீங்கள் எப்படி திரைப்பட விழாவின் நடுவராக பணியாற்றுகிறீர்கள் என்று கேட்டார்.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவரை பார்த்து சிரித்தபடியே சொன்னேன் நானும் ஒவ்வொரு முறையும் இனிமேல் நடுவராக பணியாற்றக் கூடாது என்றே முடிவு செய்வேன். ஆனால் அடுத்த பட விழாக் குழுவினர் அழைத்தவுடன் பயணம் செய்ய இயலுமே என்பதற்காக ஒத்துக் கொள்வேன். ஏதாவது ஒரு காரணத்தை முன் வைத்து பயணம் செய்யவே விரும்புகிறேன். அது என் இயல்பு என்றேன். அதை புரிந்து கொண்டவரை போல சிரித்துக் கொண்டு அகிரா குரசோவா சொன்னார். அது உண்மை தான். ஆனால் உண்மையில் இது போன்ற விழாக்களில் நடுவராக பணியாற்ற ஒத்துக் கொண்டால் நீங்கள் எங்கும் சுதந்திரமாக செல்ல முடியாது. அவர்கள் காட்டும் இடங்களைப்பார்க்க வேண்டும். சொல்லும் நிகழ்ச்சிகளில் பொம்மை போல கலந்து கொள்ள வேண்டும். அது இயல்பாக இருக்காது. நான் ஈரான் வர உண்மையில் ஆசைப்பட்டேன். அங்கே நிறைய நல்ல இயக்குனர்கள் இருக்கிறார்கள். உங்களது படங்களின் எளிமையும், யதார்த்தமும் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. குறிப்பாக நீங்கள் குழந்தைகளை நடிக்க வைப்பதை கண்டு வியந்து போயிருக்கிறேன். அது எப்படி உங்களால் முடிகிறது என்றார் குரசோவா.


அது உங்களை போன்ற திரை ஆளுமைகளிடமிருந்து கற்றுக் கொண்டதே. தொழில் முறையில்லாத நடிகர்களால் சிறப்பாக நடிக்க முடியும் என்பதை உங்கள் படங்கள் உணர்த்தியிருக்கின்றன. அதைப் பற்றி நீங்கள் பேசியதை கேட்டிருக்கிறேன். உண்மையை சொன்னால் அப்படி எந்த விசேச முறையும் பயன்படுத்தி நாங்கள் குழந்தைகளை நடிக்க வைப்பதில்லை. அவர்கள் இயல்பிலே இருக்க அனுமதிக்கிறோம். அதே நேரம் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்பதைப் புரிய வைககிறேன். மற்றபடி அதற்கு தனி முயற்சிகள் எடுப்பதில்லை.


அகிரா குரசோவா சிரித்தபடியே சொன்னார். உண்மை. தொழில்முறை நடிகர்களை கையாளுவது பெரிய சிரமம். அவர்கள் தாங்களாக ஒரு பிம்பத்தை உருவாக்கி கொண்டுவிடுகிறார்கள். அதிலிருந்து அவர்களை வெளியே வர வைப்பது எளிதானதில்லை அவர்களிடம் நல்ல நடிப்பு திறனிருக்கிறது. ஆனால் அவர்கள் புதிதாக இல்லை. அவர்களை உருமாற்றி நடிக்க வைப்பது ஒரு சவால். நீங்கள் தொழில் முறை நடிகர்களை பயன்படுத்தியிருக்கிறீர்களா?

எனது முந்தைய படத்தில் ஒருதொழில முறை நடிகரை பயன்படுத்தினேன். அவரிடமிருந்து ஒன்றை வாங்குவது எளிதானதில்லை. அவர் தனது நடிப்பிற்கு பழகியிருக்கிறார். அவரை புதிதாக நடிக்க வைப்பது பெரிய சவால்.

அதைக்கேட்ட குரசோவா சொன்னார். குழந்தைகள் உங்கள் படங்களில் மிக இயல்பாக வீட்டில் இருப்பது போல இருக்கிறார்கள். என் படங்களில் அப்படியிருப்பதில்லை. ஒளிந்து கொண்டு யாரோ நம்மை பார்ப்பது போல உணர்கிறார்கள். இந்த இயல்பான நடிப்பை எப்படி சாத்தியமாக்குகிறீர்கள் என்று கேட்டார்.

நீங்கள் குரசோவா என்பதை குழந்தைகள் கூட உணர்ந்திருப்பது தான் முக்கிய காரணம். நான் குழந்தைகளோடு படப்பிடிப்பிற்கு முன்பாகபழகுகிறேன். ஒன்றாக விளையாடுகிறேன். அவர்கள் என்னைக் கண்டு ஒருபோதும் பயம் கொள்வதில்லை என்றேன்.





**அகிரா குரசோவா ஆதங்கத்துடன் சொன்னார். ஒவ்வொரு படமும் ஒரு போராட்டமே. ஒரு படம் முடியும் போது அதன் முக்கிய கதாபாத்திரத்திடமிருந்து விடைபெறுவது மிக துக்கமான நிகழ்வு. அதன் பிறகு அவனுக்கும் நமக்குமான உறவு முறிந்து போய்விடுகிறது. அந்த இழப்பு எனக்கு மிகப்பெரிய வலி தரக்கூடியது.**

பேச்சு திரும்பவும் தொழில்முறை நடிகர்களை பற்றி திரும்பியது. தொழில் முறை நடிகர்களின் முக்கிய பிரச்சினை. இரண்டு நடிகர்கள் ஒன்றாக நடிக்கும் போது ஒருவருக்கு மற்றவர் பிடிப்பதில்லை. ஒருவர் சரியாக செய்தால் மற்றவருக்கு அது இயலாமல் போகிறது. அதனால் காட்சிக்கு தேவையான நடிப்பு சீராக கிடைப்பதில்லை. இதில் களைப்படைந்து போய்விடுவோம். இதற்காகவே நான் நாலைந்து கமராக்களை பயன்படுத்துகிறேன். லோங்ஷொட்டாகவே அதிகம் எடுக்கவும் செய்வேன். நடிகருக்கு தன்னை எந்த கமரா அண்மையில் படமாக்குகிறது என்று தெரியக்கூடாது. அப்படியான நிலை இருந்தால் அவர் கமரா மீதிருந்த கவனம் விலகி இயல்பாக நடிப்பார்.

நான் எப்போதுமே சொல்வது நல்ல சினிமா என்பது இதயத்தால் உருவாக்கப்பட்டு இதயத்தால் உணரப்பட வேண்டியது. மனிதாபிமானமிக்க திரைப்படங்கள் என்று அடையாளப்படுத்தும்படியாக இருக்க வேண்டும். அதீத வன்முறை மற்றும் ஆபாசம் இன்றைய சினிமாவின் முக்கிய பிரச்சினை. சினிமா ஒரு தேசத்தின் கலாச்சார மேம்பாட்டிற்குத்துணை செய்ய வேண்டும். ஆசிய நாடுகளில் இன்று தரமான திரைப் படங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தந்த தேசிய கலாசார கூறுகளை படங்களில் காணமுடிகிறது. ஈரான் படங்கள் எனக்கும் பிடித்திருக்கிறது. ஜப்பானிய மக்களுக்கும் அதிகம் பிடித்திருக்கிறது.

என்னுடைய படங்கள் பற்றியே பல நேரங்களில் விமர்சகர்கள் கேட்கும் போது நான் எந்தக்காரணத்தால் அப்படியொரு காட்சியை வைத்தேன் என்று எனக்கும் தெளிவாக விளக்கி சொல்ல முடிவதில்லை. சினிமா உருவாக்கத்தில் அதிக காரணங்கள், விளக்கங்கள் இல்லை. மனஉணர்ச்சியும், தூண்டுதல்களுமே காட்சிகளை உருவாக்குகின்றன. இன்று பொது ரசனை சீரழிக்கப்பட்டுவருகிறது. அதற்கு திரைப்பட இயக்குனர்களுக்கும் முக்கிய பங்கிருககிறது.

அகிரா குரசோவா ஆதங்கத்துடன் சொன்னார். ஒவ்வொரு படமும் ஒரு போராட்டமே. ஒரு படம் முடியும் போது அதன் முக்கிய கதாபாத்திரத்திடமிருந்து விடைபெறுவது மிக துக்கமான நிகழ்வு. அதன் பிறகு அவனுக்கும் நமக்குமான உறவு முறிந்து போய்விடுகிறது. அந்த இழப்பு எனக்கு மிகப்பெரிய வலி தரக் கூடியது என்று ஏதோ யோசனையில் ஆழ்ந்து போனார்.

குரசோவாவின் மகள் தேநீர் பரிமாறினார். தேநீர் பருகியபடியே சொன்னார் எனது ஓவிய ஆசிரியர் அடிக்கடி சொல்வார் உலகத்தை காணும் போது இரண்டு கண்களில் ஒன்றை மூடிக்கொண்டு ஒற்றைக் கண்ணால் பார். அப்போது தான் அதன் தனித்துவமும் குவியமும் புலப்படும். அகிரா குரசோவாவின் ஆரோக்கியம் பற்றிய அக்கறையை பகிர்ந்து கொண்டபடியே அங்கிருந்து விடைபெற்றேன். இன்னொரு முறை இது போன்ற சந்தர்ப்பம் திரும்பக்கிடைக்குமா என்ற ஏக்கம் அப்போதே துவங்கியிருந்தது.

# முதியவர்களுக்கான 1000 ரூபா கொடுப்பனவு புதிய பயனாளிகள் இணையலாம்


(யாழ். நிருபர்)

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கான புதிய பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களும், பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களும் இக் கொடுப்பனவுகளைப் பெற்றுவருகின்றனர்.

ஆனால் கடந்த இரண்டு வருடத்திற்குள் 70 வயதினைப் பூர்த்தி செய்தவர்களை இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளாத நிலை காணப்பட்டு வந்தது. இதற்கமைய கடந்த யூன் மாதம் 70 வயதைப் பூர்த்தி செய்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட அனைவரையும் இத்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ள சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்பொழுது இத்தகைய முதியவர்களின் விபரங்கள் கிராமசேவையாளர் ஊடாக திரட்டப்பட்டு வருவதாகவும் விரைவில் இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)



பூநகரியில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் சேகரிப்பு, பால் பதனிடல் பால் உணவுப் பொருள்கள் உற்பத்திக்கான கட்டடத்தொகுதி திறப்பு விழா அண்மையில் இடம பெற்றபோது வடமாகாண விவசாய, கூட்டுறவு கால் நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கட்டடத்தை திறந்து வைப்பதையும், மாலைதீவு மற்றும் இலங்கைக்கான ஐ.ஓ.எம். நிறுவன பிரதம அலுவலர் யோசெபே உரையாற்றுவதையும் காணலாம். (112)

# பயணிகள் சிரமம் எப்போது நீங்கும்

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் நகரில் உள்ள பேருந்து தரிப்பிடமானது உரிய முறையில் இல்லையென பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். எ-9 வீதியில் கொடிகாமம் நகரில் இருக்கும் பேருந்து தரிப்பிடமானது பல வருடங்களாக திருத்தப்படாமல் பயணிகள் வெயிலிலும் மழையிலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் இந்த பேருந்துதரிப்பிடத்தையே பயன்படுத்துகின்றனர். சிறுவர்கள், முதியவர்கள், மாற்றுவலுவுடையோர் எனப்பலரும் இந்த பேருந்து தரிப்பிடத்தை பயன்படுத் துவதாகவும், இருப்பதற்கு போதிய வசதிகளோ, வெயில், மழை காலங்களில் பாதுகாப்பான இடம் இல்லையென பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து கொடிகாமம் நகர பேருந்து தரிப்பிடத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# கலியுக வரதன் கந்தனுக்கு கந்தஷஷ்டி விரதம்

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகப்பெருமானுக்குரிய விரதம் கந்தஷஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகிறது. இந்த விரதம் ஆறுநாள் அனுட்டிக்கப்படும் ஆனால் இம்முறை ஐந்து நாள்களுக்குரியதாக பஞ்சாங்கம் அறிவித்திருக்கின்றது. புத்திரபாக்கியம் என்ற அரியபொதிய அரும்பேற்றையளிக்கின்ற இந்த விரதத்தை அடியார்கள் முறையாக அனுட்டித்து முருகனின் திருவருட் கருணைக்குப் பாத்திரமாகின்றனர்.

கலியுக வரதனான கந்தனுக்குரிய இந்தக் கந்தஷஷ்டி விரதமானது ஆறுவருடங்களுக்கு அனுட்டிக்கப்படவேண்டும். சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்பது ஆன்றோர்வாக்கு. அதாவது கந்தஷஷ்டி விரதம் இருந்தால் கர்ப்பப்பையிலே சிசு உருவாகும் என்பதே அதன் பொருள்.

இதனை அனுஷ்டிக்க விரும்புவோர் ஏதாவது ஒரு முருகனுடைய ஆலயத்துக்குச் சென்று தர்ப்பை வாங்கி அணிந்து சங்கற்பம் செய்து விரதத்தை ஆரம்பிக்கலாம். சிலர் ஆறுநாள்களும் எதுவுமே உண்ணாமல் ஆறு மிளகு மட்டும் தண்ணீருடன் கொண்டு விரதமிருப்பர். சிலர் மதியம் ஒருபொழுதுண்டு இரவு பால், பழம் அருந்தி விரதம் காப்பர். இன்னும் சிலர் ஒன்றுமே உண்ணாமல் வெறும் தண்ணீருடன் மட்டும் இருப்பர். ஆனால் இந்த விரதத்தை விளையாட்டாக எண்ணக்கூடாது அவ்வாறு முழுமையான கட்டுப்பாட்டின்றி விரதம் என்று சொல்லிக்கொண்டு தப்பாக நடந்தால் அது குளிக்கப்போய்ச் சேறு பூசியதாக ஆகிவிடும்.

ஐப்பசி மாத அமாவாசையையடுத்து வருகின்ற பிரதமை முதலாகவும் ஷஷ்டி ஈறாகவும் உள்ள ஆறு நாள் விரதமே சரியானது முருகப் பெருமான் சூரனைச் சங்கரித்த நாளே இக்கந்தஷஷ்டி சுக்கிரபட்சத்து ஷஷ்டி முதல் ஓராண்டில் வரும் 24 ஷஷ்டிகளிலும் விரதம் காப்பாரும் உண்டு.

முருகப்பெருமானின் அருள் பெற உதவுகின்ற



இந்த விரதம் புனிதமானது போரில் வெற்றியீட்டிய கந்த னுக்கு தேவர்கள் வெற்றிப் பரிசாக தெய்வானையை மணஞ்செய்து கொடுத்தனர். தேவர்களுக்கு அருள் பாலித்துத் தேவர் சிறைமீட்ட தேவாதி தேவனின் கருணையினால் இப்பூவுலகில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ இவ்விரதம் வகை செய்கின்றது. ஆகவே இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்து சதுர்வித புருஷார்த்தங்களையடைந்து வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# வேலை வாய்ப்புச் செய்திகள்

தனியார் நிறுவனத்துக்கு சாரதி உதவியாட்கள் தேவை. சம்பளம 48ஆயிரம் நிரந்தர தொழில், தங்குமிடம் உண்டு. தொடர்புக்கு 0774283019, 0717929917

வத்தளை, தெகிவளை. ஜாஎல, கண்டி, அவிசாவளை, நிட்டம்புவ, நுவரெலியா, யாழ்ப்பாணம், வவுனியா, இரத்தினபுரி, ஹட்டன், பதுளை ஆகிய இடங்களிலிருந்து தமிழ் முஸ்லிம் ஆண்,பெண் இருபாலாரும் தேவை. பிரதான தொழிற்சாலைகளாக பிஸ்கட்,யோகட், கிளவுஸ், சொக்லேட்,பொலித்தீன் என்பவற்றில் உற்பத்தி, பொதியிடல் களஞ்சியப் பிரிவில் வேலை வாய்ப்பு உணவு,தங்குமிடம் குறைந்த விலையில் வருகை தரும் நாளிலே வேலை தொடர்புக்கு 0778508118

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றுக்கு சகல பிரதேசங்களில் இருந்தும் திறமைவாய்ந்த (sub) மார்கள் ஏஜன்டுகள் தேவை தொடர்புக்கு 0773696505.

உள்நாடு முழுவதும் (distributors) விநியோகஸ்தர்கள் மற்றும் (sales rep)தேவை தொடர்புக்கு 0777643424, 0710784636

வீதிப்புனரமைப்பு கட்டட நிர்மாணப் பகுதிக்கு போக்குவரத்துக்கு 10 wheel டிப்பர், கென்டெயினர், பவுஸர், வீல்லோடர், ஒப்ரேட்டர், சாரதிகள், உதவியாளர்கள் உடனடியாக தேவை.18-55வயது வரை சாப்பாடு, தங்குமிடவசதியுண்டு.யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், அனுராதபுரம், பொலனறுவை, அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகிய பகுதிகளில் விரும்பிய இடத்தில் வேலை செய்யலாம்.தொடர்புக்கு. 0774840520

மத்திய மாகாணத்திற்குள் நீண்ட கால கட்டட நிர்மாண வேலைகளுக்கு தச்சு,மேசன், செட்டலிங், டைல்ஸ் பெயின்டிங் போன்ற வேலைகளுக்கு குருநாகல், மாத்தளை, தம்புள்ளை, யாழ்ப்பாணம், கொழும்பை அண்மித்த பகுதிகளுக்கு உடனடியாக தேவை தொடர்புக்கு .0776837995

உடனடி வேலை வாய்ப்புகள் 0fficer,executive and assistant mangers சாதாரணதரம்,உயர்தரம் முடித்தவர்கள் வேலை எதிர்பார்ப்பவர்களுக்கு அரிய வாய்ப்பு தொடர்புக்கு 0771637571, 0716630986.

கிருலப்பனையிலுள்ள 'யாழ். குடும்பமொன்றுக்கு தங்கியிருந்து நன்றாக யாழ். உணவு, சமைக்கத் தெரிந்த வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை. வடக்கு, கிழக்கு மாகாணத்தவர் விரும்பத்தக்கது. தங்குமிடம், உணவு, இலவசம். (வயது 20-50 வரை) சம்பளம் 20-45 வரை தொடர்புக்கு 011 5288916, 0759600233.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ரைப்பிங், போட்டோ ஷொப், கணனி அறிவுடைய 20-30 வயது எல்லைக்குட்ட பெண் உடன் தேவை. Transworld Computer, 233, Modara Street,Modara, Colombo. 15 தொடர்புக்கு 0112527062.

உங்களுக்கு கப்பல், விமான நிலையத்தில் வேலை செய்வதற்கு விருப்பமா? துறைமுகம் மற்றும் விமான நிலையத்தில் வெல்டிங், இலக்ரீசியன், பெயின்டர், கிளீனிங், லொன்றி போன்ற பிரிவுகளுக்கு 18 - 45 வயதுடைய ஆண், பெண் உடனடியாகத் தேவை. வேலையின் நேரம் உணவு, இலவசம், தங்குமிடம் குறைந்த விலைகளில் மேலதிகத் தொடர்புக்கு: 077 5997579.

# ஊடக சுதந்திரத்தை மீட்டுத்தாருங்கள்

## சுதந்திர ஊடகமையம் கோரிக்கை

(கொழும்பு)

தொலைந்துபோன ஊடக சுதந்திரத்தை மீட்டெடுக்க உதவும்படி சுதந்திர ஊடகமையம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிடம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளது.

எமது நாட்டில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த பொதுநலவாய நாடுகளின் தலைவீர்கள் செயற்பட வேண்டும் என்று இலங்கையின் சுதந்திர ஊடக மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திர ஊடக மையம் இது தொடர்பில் திறந்தநிலைக் கோரிக்கை ஒன்றை பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிடம் விடுத்துள்ளது.அதில் உள்ளூரில் மனித உரிமைகளை காத்தல் மற்றும் பேச்சு சுதந்திரம் என்ற விடயங்களை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.2002 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பேச்சு சுதந்திரத்துக்கான உரிமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளமையையும் சுதந்திர ஊடக மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

போரின் போது இலங்கையில் 34 ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டனர். 100இற்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டனர்.இதன்காரணமாக 100இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.


அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கையின் ஜனாதிபதியே பொதுநலவாய நாடுகளின் தலைவராக இருக்கப்போகிறார். எனவே இதன்போது பொதுநலவாய கொள்கைகள் பின்பற்றப்படும் என்று தாம் நம்பிக்கைகொள்வதாக சுதந்திர ஊடகமையம் குறிப்பிட்டுள்ளது.

# நாடுதழுவிய போராட்டத்தை மருத்துவர்கள் கைவிட்டனர்

அரச வைத்தியர்கள் இன்று 4ஆம் திகதி தொடக்கம் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளவிருந்த பணி பகிஸ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 8 மணி தொடக்கம் நாளை காலை 8 மணி வரையான 24 மணித்தியால பணி பகிஸ்கரிப்பை முன்னெடுக்கவிருப்பதாக கடந்த 28ஆம் திகதி அந்தச் சங்கம் தெரிவித்தது.

எவ்வாறாயினும் தமது சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக நிதி அமைச்சின் செயலாளர் வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து ஆறு வார காலத்திற்கு பணி பகிஸ்கரிப்பை கைவிட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்க ஊடக பேச்சாளர் நவீன் த சொய்சா குறிப்பிட்டார்.




# திருட்டை ஒழிக்க ஒன்றுபடுங்கள்

நான் ஒரு ஊடகப்பிரியன் யாழ்.குடாவில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளை வாசிப்பவன்.

எந்தப்பத்திரிகைகளிலும எங்காவது ஒரு மூலையில் இடம் பிடித்திருப்பது திருட்டு. இவற்றில் முன்பு வீடுகளிலும் பெரும்பாலும் திருட்டுப்போவது வழமையாக இருந்தது. தற்போது திருட்டு விரிவடைந்து தமிழ் மக்களால் வணங்கப்படும் ஆலயங்களும் மற்றும் பகல்வேளை பகற்கொள்ளை என்று தொடர்ந்து செல்கின்றன. போகின்றபோக்கைப் பார்த்தால் யாழில் எதிர்காலத்தில் திருட்டும் ஒரு தொழிலாக ஒரு கும்பலால் நடைமுறைப்படுத்தப்படும் போல் தெரிகின்றது.

எமது மக்கள் முப்பது வருட போரில் வடுவை சுமந்து இழக்கக்கூடாத உயிர் உடமை எல்லாம் இழந்து கடந்த 2009 பிற்பகுதியில் இருந்து வெடியோசை இல்லாத ஒரு நிம்மதியான வாழ்வை வாழ்ந்து சிறுகச்சிறுக சேமித்துவரும் நிலையில் அதைக் கூட இந்த திருட்டுக்கும்பல் விட்டு வைக்கின்றார்கள் இல்லை. இவற்றை (திருட்டை) சமூகசேவையில் அக்கறை உள்ளவர்கள் மற்றும் ஒவ்வொரு கிராமத்து இளைஞர்களும் இரவு காவல் கடமைக்கு தயாராகவும் மற்றும் விழிப்புணர்வும் அடையவேண்டும். நிச்சயம் திருட்டு என்ற சொல்லை மாற்றியமைக்க முடியும். எமது இளைஞர்கள் எத்தனையோ துன்ப துயரங்களை சுமந்து வாழ்ந்தவர்கள் வாழப்பழகியவர்கள் இன்றும் அவர்கள் மனம் திறந்து ஒன்றுபட்டு செயற்பட்டால் இந்த திருட்டுப்பேர்வழிகள் எங்கோ ஓர் மூலையில் முடங்கி தமது தொழிலை கைவிட்டு தோல்வியில் வெட்கித் தலைகுனிந்து உழைத்து வாழப்பழகுவார்கள் எனவே இளைஞர்களே ஒன்றுபடுங்கள் எமது மக்களின் சொத்துக்களை பாதுகாத்து நிம்மதியாக வாழவிடுவோம்!

(வாசகன்)

# பரமர் சங்கமம்



"சூடு கண்ட பூனை அடுப்படியை நாடா' தெண்டு சொல்லி வைத்த தமிழினம் திரும்பத்திரும்ப அதிகப்படிச்ச பல்லியைப் போல கூழ்ப்பானேல விழுகிறதெண்டு தானை நிக்குது. இனமொழி உணர்ச்சிகளைக்கிளறிச் சூடேற்றி விடுவதற்கு பின்னால் செல்லுதற்கு அறிகுறியா சமீபத்தில் நடந்து முடிந்த வடமாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பு கட்டியம் கூறி நிக்கிறது. அந்தப் பழமொழி தனியே தமிழினத்துக்கு மட்டுமா பொருந்தும்? சகோதர மொழியினருக்கும் உடையது தானே!

வடபகுதியில் இருந்து படையினரை வாபஸ் பெறும்படி வாயோரியாக கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டுதான் வருகின்றனர். அதற்கு அரசு செவி சாய்ப்பதாக இல்லை. ஜனாதிபதி சமீபத்தில் வடக்கில் இருந்து இராணுவம் அகற்றப்படமாட்டாதென அடிச்சுக்கூறி விட்டார். 1980 களுக்கு முன்பாக பலாலி இராணுவமுகாம் மட்டும் சிறிய அளவு படையினருடன் குறிப்பிட்ட இட எல்லைக்குள் அமைந்து இருந்தது.

நாட்டைத் துண்டாட வெளிக்கிட்ட தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தீவிரத்துக்குச் சமனாக அல்லது மேலாக படையினரின் வலுவைக் கூட்ட வேண்டிய தேவைகள் வளர்ந்து வந்தன. அவ்வகையில் இலங்கையில் இராணுவப் படைபலத்தை உயர்த்திவிட்ட பெருமையும் எமக்குண்டு. இன்றைக்கு அந்நியப் படைகள் நுழைந்து சிப்பிலிக்கூத்தாட்ட முடியாத அளவில் இலங்கைப் படையினரின் இராணுவப்பலம் ஆளணி மற்றும் வாகனாதி தளபாட, வானூர்த்தி தொழில் நுட்பம் என்று பல்வேறு மட்டத்தில் வளர்க்கப்பட் டுள்ளன. மட்டென்று இல்லாமல் இன அழிப்படையிவ் கூடுதலாக வாழும் தமிழர்களிடம் மீண்டுமொரு போராட்ட வரலாறு ஆரம்பிக்காமல் இருக்க கண்ணுக்கு எண்ணெய் விட்டு பார்த்துக் கொண்டிருக்கும் அரசிடம் போய் அதனைக் கேட்டால் செய்யவா போகிறது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி படைகளை வடக்கில் இருந்து எடுக்கப்போவதில்லை எனக்கூறியதற்கான காரணங்களையும் தெரிவித்து இருந்தார் திரும்பவும் வடக்குக்கிழக்கில் புலிகள் தலையெடுக்க அது வாய்ப்பு வழங்குவதாக அமையுமென்றவர் சுட்டிக்காட்டியதில் எந்த வித இனக்குரோதமோ தமிழரை நசுக்கும் பாங்கோ வெளிப்படவில்லை. இங்கேதான் எண்டில்லாமல் தென்பகுதிகளிலும் இராணுவ வளங்கள் அதிகரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கலாம். மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிறுவுவதற்கு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைச் சிங்கள விவசாயிகளிடம் இருந்தும் சுவீகரித்து இருந்தது அரசு.

அத போல் வடபகுதியில் இராணுவப் படைபலத்தை அதிகரிக்க அயலில் இருக்கும் காணிகளை அரசு சுவீகரித்து மாற்றீடாக வேறு இடங்களில் காணிகள் வழங்குவதென்றும் அரச இயந்திரங்களுக்குப் புதிய ஒன்றல்ல .இல்லாமலும் இனியொரு மூன்று தசாப்தங்களை அரசு வீணடிக்கவும் தயாராக இராதென்பதைப் புரிந்த கொள்ள வேண்டும். 'சூடுகண்ட பூனை' இன்னுமொருக்கா சூடு வாங்குவதென்பது அந்தக்காலம் மலையேறி விட்டதென்றே கொள்ள வேண்டும் இல்லையே பின்னை. சொல்லுங்க பாப்பம்.....

# இளம் சைவப்புலவர் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை வைப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களைப்பெற விரும்புவோா தலைவா அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இல 153 காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிலாசம் எழுதி முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் 50 ரூபாவுக்கான காசுக் கட்டளையையும் இணைத்து அனுப்பி பெற்றுக்கொள்ள முடியுமென அகில இலங்கை சைவப் புலவர் சங்க கௌரவ செயலாளர் செ. கந்தசத்தியதாசன் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 0776132176 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (10)

# போர்க்குற்ற விசாரணை வேண்டும்

## பிரித்தானிய தொழில்கட்சி விடாப்பிடி

2009 ஆம் ஆண்டு இலங்கை இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரித்தானியா தொழில்கட்சித் தலைவர் மிலிபேண்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாத நடுப்பகுதி யில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர்களுக்கும், அவருக்கும் இடையில் லண்டனில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இதனைக் கூறினார். இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய விடயங்களை காரணம் காட்டி இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொழிற்கட்சி இருந்து வருவதை பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்றுள்ளது.

அதே வேளை இலங்கையின் நல்லிணக்கம்? என்ற தலைப்பிலான பேரவையின் புதிய அறிக்கையின் பிரதியொன்றும் மிலிபேண்டிடம் கையளிக்கப்பட்டது. இலங்கையில் தொடரும் மனிதஉரிமை மீறல்கள், நிலஅபகரிப்பு, பொருளாதார அடக்குமுறை, மற்றும் ஏனைய குற்றச்செயல்கள் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் தற்பொழுதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மரணங்கள், காணாமல் போனவர்களின் விடயங்கள், காயமடைந்தவர்கள், விதவைகளின் நிலைமைகள் தொடர்பில் மிலிபேண்ட் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

தனது சகாக்களுடன் இந்த விடயங்கள் குறித்து பகிர்ந்து நம்பிக்கையூட்டும் உரிய முனைப்புகளை மேற்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் கார்டியன் பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்த தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நிழல் வெளிவிவகார அமைச்சருமான டக்ளஸ் அலெக்சாண்டர் பிரித்தானிய பிரதமர் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

# மருந்துப் பொருட்களுக்கு இனி கட்டுப்பாட்டு விலை

## அரசு அவசர நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

ஆங்கில மருந்துகளுக்கு எதிர்வரும் பெப்ரவரி முதல் கட்டுப்பாட்டு விலையை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மருந்துவகைகளை நிர்ணயிக்கும் வகையில் பரிந்துரைகள் வழங்க ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்றை அமைக்கும்படி சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்குழுவில் சுகாதார அமைச்சின் செயலாளர் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம், இரசாயனசேவைகள் பிரதிப்பணிப்பாளர், சுகாதார வழங்கல் பிரிவின் இயக்குநர் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (10)

க.பொ.த.(சாதாரணதர)
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
கல்வி முரசு
32 | T | I
Grade - 11
கணிதம்

1) சுருக்குக : 3.44 + 34.4

2) தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்ட கதிரைகளில் ஒன்றின் நிறை 4.325 kg ஆகும். அவ்வாறான 50 கதிரைகளின் நிறை யாது?


3) $3.47 \times 10^{-6}$ தரப்பட்ட எண்ணை சாதாரண முறையில் எழுதுக.

4) சுருக்குக $\frac{1}{2} + \frac{1}{4} + \frac{3}{4}$


5) சுட்டி அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க

$3^x = \frac{1}{3}$

6) உருவில் தரவுகளிற்கமைய x இன் பெறுமானத்தைக் காண்க





7) தரப்பட்ட உருவில் சுற்றளவு யாது?





8) ரூ.1300 இற்கு குறிக்கப்பட்ட பொருள் ஒன்றிற்கு விற்கும் போது 15% கழிவு வழங்கப்படுகின்றது. விற்பனை விலை யாது?

9) AB நேர்கோடு ஆயின் x இன் பெறுமானம் யாது?




10) அருகிலுள்ள கனவுருவின் நீள, அகல, உயரம் என்பன முறையே 6 cm, 5 cm, 10 cm ஆகும். இதன் கனவளவைக் காண்க.





11) $X^2-9x$ நிறைவர்க்கமாக்குவதற்கு தேவையான மாறிலியைக் காண்க.

12) சுருக்குக : $\frac{1}{2x} + \frac{1}{4} + \frac{3}{4x^2}$

13) ஒருவர் தன்னிடம் உள்ள பணத்தில் 2/5 பங்கை செலவு செய்த பின் அவரிடம் ரூ.1800 எஞ்சியிருந்தது எனின் ஆரம்பத்தில் அவரிடம் இருந்த பணத்தொகையைக் காண்க.


14) வேலை ஒன்றை 10 பேர் சேர்ந்து செய்ய 6 நாட்கள் எடுக்கும் எனின் அவ்வேலையை 15 பேர் செய்ய எத்தனை நாட்கள் எடுக்கும்.

15) தரப்பட்ட உருவில் உள்ள தரவுகளின்படி a,b இன் பெறுமானங்களைக் காண்க.




16) பெறுமானம் காண்க.
$\sin 60^0 \cos 30^0 + \cos 60^0 \sin 30^0$

17) அருகிலுள்ள உருவில் முக்கோணிகள் ABC, DEC என்பனவற்றிற்கிடையிலான தொடர்பை எழுதுக. மேலும் பக்கம் CE இன் பெறுமானத்தைக் காண்க.




18) சிறுவன் ஒருவன் கடை ஒன்றில் 60 பட்டாசுகள் வாங்கி னான். அதில் ஒரு பட்டாசு வெடிக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு 1/5 எனக் கடைக்காரர் கூறுகின்றார் எனின், சிறுவன் வாங்கிய பட்டாசுகளில் எத்தனை பட்டாசுகள் வெடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

19) சுருக்குக : $\frac{(x+8)\ (4y+16)}{2x+16} \times \frac{x+8}{y+4}$


20) கடை ஒன்றில் ரூ. 10 விலையுள்ள 20 அப்பிள்களும் ரூ. 15 விலையுள்ள 25 அப்பிள்களும் உள்ளன. அங்குள்ள அப்பிள்பழங்களில் ஒன்றின் இடை விலை யாது?

21) 3, 100 இடையில் 4 இன் மடங்குகள் எத்தனை உள்ளன?

22) $x^2 - 9 = p$, $x - 2y = 3$, $x - 3y = -3$ எனத் தரப்படின் காரணிகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி p, y இற்கிடையிலான ஒரு தொடர்பைக் காண்க.


23) 1 kg செத்தல் மிளகாய் ரூ.210 வீதம் 5 kg செத்தல் மிளகாயும் 1 kg மல்லி ரூ.90 வீதம் 2.5 kg மல்லியும் வாங்குவதற்குத் தேவையான பணத்தைக் கொண்டு 5 kg மிளகாய்த்தூள் வாங்கலாம் எனின் 100 g மிளகாய்த்தூளின் விலையைக் காண்க.


24) தரப்பட்டுள்ள உருவில் மையம் O ஆயின் அதன் சுற்றளவைக் காண்க. விடையைக் காண்க. விடையைக் கிட்டிய முதலாம் தசமதானத்தில் தருக.




25) 5 cm, 12 cm, 13 cm நீளங்களைப் பக்கங்களாக கொண்ட. செங்கோண முக்கோணிகளை முனைகளாக வும் 15 cm நீளமுடையதுமான அரியத்தின் கனவளவு யாது?

26) உருவில் AB//CD, CO =OB எனின்
1) முக்கோணிகள் ABO, CDO என்பன ஒருங்கிசைவதற்கான நிபந்தனையைத் தருக.
2) $\hat{OCD} + \hat{CDO}$ இற்குச் சமனான ஒரு கோணத்தைத் தருக. மேலும் அதற்கான தோற்றத்தையும் கூறுக.








27) செங்கோண முக்கோணி ABC இல் BC இன் நடுப்புள்ளி D ஆகும்.
BC = 8 cm, 2 DC = AD எனின் முக்கோணி ADC இன் பரப்பளவைக் காண்க. (விடையைச் சேடுகளில் தருக)


28) 5.5 cm பக்கமுள்ள சதுர வடிவாக வளைக்கப்பட்ட கம்பி ஒன்றை ஒரு வட்டவடிவாக வளைக்கப்பட்டு அதன்மேல் வட்டவடிவான கடதாசி ஒட்டப்படுகிற தெனின் அக்கடதாசியின் பரப்பளவைக் காண்க.

29) நாற்பக்கல் ABCD இல் AC , BD என்பன இணைக்கப்பட்டுள்ளன.
AD =DC, AB// DC எனின்
1) முக்கோணிகள் ABC, ABC என்பவற்றிற்கு இடையிலான தொடர்பை எழுதுக.
2) x,y என்பவற்றின் அளவுகளைக் காண்க.

30) AB ஆனது 24 cm நீளமான கோடு ஆகும். புள்ளிகள் A, B இலிருந்து சமதூரத்தில் உள்ளதும் கோடு AB இல் இருந்து 5 cm தூரத்தில் உள்ளதுமான புள்ளி C ஐ ஒழுக்குகள் பற்றிய கொள்கையைப் பயன்படுத்தி பரும்படிப் படம் ஒன்று வரைந்து அதில் எத்தனை புள்ளிகள் உள்ளன எனக் காட்டுக. மேலும் AC இன் நீளத்தையும் காண்க.





## பகுதி I (B)




01) a) ABCD ஒரு சதுரம். AB, BC, CD, DA என்பவற்றின் நடுப்புள்ளிகள் முறையே K,L,M,N ஆகும். KLMN ஒரு சதுரம் என நிறுவுக.

b) PQRS ஓர் சதுரமாகும்.
$\hat{RXY} = \hat{RYX}$ ஆகுமாறு புள்ளி X ஆனது பக்கம் PQ இலும் புள்ளி Y ஆனது பக்கம் PS இலும் அமைந்துள்ளது.
SY = QX எனக் காட்டுங்கள்.




02) சுருக்குக:

i) $(X^2 + 5x - 14) \div (x - 2)$

ii) $(ab - 8)^2\ (ab - 2)$

iii) மடக்கை வாய்பாட்டை உபயோகித்து சுருக்குக. $\sqrt{\frac{958}{37.6 \times 4.091}}$
(விடையை இரு தசமதானங்களுக்கு திருத்தமாக தருக)

## பகுதி II (A)

01) பகுதி A யிலிருந்து 5 வினாக்களுக்கும் பகுதி B யிலிருந்து 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கும் விடையளிக்குக.

01) அரச ஊழியர்களின் சம்பளம் 6% ஆல் அதிகரிக்கப்படுகின்றது. மேற்குறித்த தகவலைக் கருத்திற் கொண்டு
1) 6% இனை பின்ன வடிவில் தருக.
2) ரூ.16200 சம்பளம் பெறும் ஒருவரின் சம்பளத் தொகை எவ்வளவால் அதிகரிக்கும்?
3) ரூ. 25000 சம்பளம் பெற்ற ஒருவருக்குச் சம்பள உயர்வின் பின்னர் கிடைக்கும் சம்பளத் தொகை எவ்வளவு?
4) சம்பள அதிகரிப்பின் பின்னர் கரன் பெற்ற சம்பளத் தொகை ரூ.21200 எனின், அதிகரிப்பிற்கு முன் பெற்ற சம்பளம் யாது?
5) கரனின் முன்னைய சம்பளத்திற்கும் தற்போதைய சம்பளத்திற்குமான எளிய விகிதம் யாது?

02. பெரேரா 6% பங்கு இலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் ரூ. 8 படி பங்குகளை வாங்குவதற்கு ரூ. 32000 இனை முதலிட்டார். வருட இறுதியில் பங்கு இலாபமாக ரூ. 24000 கிடைத்தது.

1) பெரேரா வாங்கிய பங்குகள் எத்தனை?
2) பங்கு ஒன்றின் பெயர் மாத்திரை பெறுமானம் யாது?
3) வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
4) பங்கு இலாபத்தை முதலீட்டின் சதவீதமாகத் தருக.

03. செவ்வகத்தின் நீளம், அகலத்திலும் 5 m இனால் கூடியது. செவ்வகத்தின் பரப்பளவு $1050m^2$

1) செவ்வகத்தின் நீளத்தினை x எனக் கொண்டு x இலான ஓர் இருபடிச் சமன்பாட்டினை அமைக்க.
2) செவ்வகத்தின் நீள, அகலத்தைக் காண்க.
3) இச் செவ்வகத்தின் 2/5 பகுதியில் புல் நாட்டப்பட்டுள்ளது. புல் நாட்டப்பட்ட பரப்பளவினை $m^2$ இல் காண்க.
4) மிகுதி பரப்பளவிற்கு பூ மரம் நாட்டப்பட்டுள்ளதாயின் பூமரம் நாட்டப்பட்டுள்ள பரப்பளவு யாது?

04) $y = 3 - (x-1)^2$ இன் வரைபினை வரைவதற்கான பெறுமானங்கள் இடம்பெறும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| y | -6 | -1 | 2 | ----- | 2 | -1 | -------- |

1) பூரணப்படுத்தப்படாத அட்டவணையினை நிரப்புக.
2) பொருத்தமான அளவிடையினைப் பெற்று சார்பின் வரைபினை வரைக.
3) உமது வரைபைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II (A)

01) பகுதி A யிலிருந்து 5 வினாக்களுக்கும் பகுதி B யிலிருந்து 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கும் விடையளிக்குக.

01) அரச ஊழியர்களின் சம்பளம் 6% ஆல் அதிகரிக்கப்படுகின்றது. மேற்குறித்த தகவலைக் கருத்திற் கொண்டு

1) 6% இனை பின்ன வடிவில் தருக.
2) ரூ.16200 சம்பளம் பெறும் ஒருவரின் சம்பளத் தொகை எவ்வளவால் அதிகரிக்கும்?
3) ரூ. 25000 சம்பளம் பெற்ற ஒருவருக்குச் சம்பள உயர்வின் பின்னர் கிடைக்கும் சம்பளத் தொகை எவ்வளவு?
4) சம்பள அதிகரிப்பின் பின்னர் கரன் பெற்ற சம்பளத் தொகை ரூ.21200 எனின், அதிகரிப்பிற்கு முன் பெற்ற சம்பளம் யாது?
5) கரனின் முன்னைய சம்பளத்திற்கும் தற்போதைய சம்பளத்திற்குமான எளிய விகிதம் யாது?

02. பெரேரா 6% பங்கு இலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் ரூ. 8 படி பங்குகளை வாங்குவதற்கு ரூ. 32000 இனை முதலிட்டார். வருட இறுதியில் பங்கு இலாபமாக ரூ. 24000 கிடைத்தது.

1) பெரேரா வாங்கிய பங்குகள் எத்தனை?
2) பங்கு ஒன்றின் பெயர் மாத்திரை பெறுமானம் யாது?
3) வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
4) பங்கு இலாபத்தை முதலீட்டின் சதவீதமாகத் தருக.

03. செவ்வகத்தின் நீளம், அகலத்திலும் 5 m இனால் கூடியது. செவ்வகத்தின் பரப்பளவு $1050m^2$

1) செவ்வகத்தின் நீளத்தினை x எனக் கொண்டு x இலான ஓர் இருபடிச் சமன்பாட்டினை அமைக்க.
2) செவ்வகத்தின் நீள, அகலத்தைக் காண்க.
3) இச் செவ்வகத்தின் 2/5 பகுதியில் புல் நாட்டப்பட்டுள்ளது. புல் நாட்டப்பட்ட பரப்பளவினை $m^2$ இல் காண்க.
4) மிகுதி பரப்பளவிற்கு பூ மரம் நாட்டப்பட்டுள்ளதாயின் பூமரம் நாட்டப்பட்டுள்ள பரப்பளவு யாது?

04) $y = 3 - (x-1)^2$ இன் வரைபினை வரைவதற்கான பெறுமானங்கள் இடம்பெறும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| y | -6 | -1 | 2 | ----- | 2 | -1 | -------- |

1) பூரணப்படுத்தப்படாத அட்டவணையினை நிரப்புக.
2) பொருத்தமான அளவிடையினைப் பெற்று சார்பின் வரைபினை வரைக.
3) உமது வரைபைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
a) சமச்சீரச்சின் சமன்பாடு
b) திரும்பற் புள்ளியின் ஆள்கூறு
c) $3 - (x-1)^2 = 0$ இன் தீர்வுகள்
d) $\sqrt{2}$ இன் பெறுமானம்


05) கரவாயத்தையும், mm /cm அளவுகோலையும் மாத்திரம் உபயோகித்து

1) $AB = 6\,cm, ABC = 45^0 / AB = 2BC$ ஆகவுள்ள இணைகரம் ABCD ஐ அமைக்க (அமைப்பைத் தொடங்கு முன் இணைகரத்தின் பருமட்டான படமொன்றை வரைக)
2) மூலைவிட்டம் DB இன் நீளத்தை அளந்தெழுதுக.
3) நீட்டப்பட்ட DB நீட்டப்பட்ட DC பக்கம் BC ஆகியவற்றை தொடுகின்ற வட்டத்தை அமைக்க.
4) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.


04) 1) ஒரு கூட்டல் விருத்தியின் 1 ஆம், 3 ஆம், 5ஆம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை அதன் 8 ஆம் உறுப்பிற்கு சமனாகும்.. அதன்முதலாம் உறுப்பு 5 எனின் பொது வித்தியாசத்தைக் காண்க.

2) 145 எத்தனையாம் உறுப்பு?
3) முதல் 15 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
4) எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை 2000 காண்க.

05) உருவில் ABCDE என்பது ஒழுங்கான ஐங்கோணியாகும்.




1) ஒழுங்கான ஐங்கோணி ஒன்றில் அகக்கோணமொன்றின் அளவைக் கணிக்குக.
2) $A\hat{B}C = A\hat{B}E$ எனக் காட்டுக
3) AB யும் EC யும் சமாந்தரமெனக் காட்டுக
4) $A\hat{E}B = A\hat{C}B$ ஆகுமா? ஏன்?
5) A,B,C ஆகிய புள்ளிகளினூடாக வட்டம் ஒன்று வரைக.





ABC ஓர் சமபக்க முக்கோணி எனின் x, y என்பவற்றின் பெறுமதிகளைக் காண்க.

b) காரணிப்படுத்துக

i) $x^2 - 7x - 18$

ii) வினா (i) இன் காரணிகளைக் கொண்டு $19^2 - 7 \times 19 - 18$ இன் பெறுமானம் காண்க.


06) 24 m நீளமான ஏணி ஒன்று இரு நிலைக்குத்தான சுவர்கள் BC, AE இன் அடி D யினை நகர்த்தாது பொருத்தும்போது முறையே $60^0, 45^0$ கிடையுடன் ஆக்குகின்றது எனின்,




i) CD யின் நீளத்தைக் காண்க.
ii) DE இன் நீளத்தைக் காண்க
iii) CE இன் நீளம் யாது?
iv) இவ் ஏணியானது கிடையுடன் $30^0$ ஆக்குமாறு பொருத்தப்படின் ஏணியின் நுனி சுவரிலிருந்து எவ்வளவு உயரத்தில் இருக்கும்.

07. ஓர் கூட்டல் விருத்தியின்முதல் 4 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 30, 4 ஆவது உறுப்பானது முதலாவது உறுப்பின் 4 மடங்காகும்.


i) பொருத்தமான 2 சமன்பாடுகளை a,b இல் அமைக்க
ii) சமன்பாட்டினைத் தீர்த்து முதல் 4 உறுப்புக்களையும் எழுதுக.
iii) இத்தொடரின் 12 ஆம் உறுப்பு யாது?
iv) எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை 120 ஆகும்.




20 m பக்க நீளமுடைய சதுரமுகிவடிவக் குற்றி ஒன்றிலிருந்து 14 m விட்டமுடைய உருளை ஒன்று தோண்டி எடுக்கப்படு கிறது.

i) உருளையின் ஆரை யாது?
ii) இத் திண்மத்திற்கு எத்தனை மேற் பரப்புக்கள் உண்டு?
iii) இத்திண்மத்தின் கனவளவினை $m^3$ இல் காண்க.
iv) இத் திண்மக் குற்றியின் $1\,m^3 = 200\,g$ எனின் இத் திண்மத்தின் நிலையினை kg இல் தருக.


08) தோட்டமொன்றின் பூ பாத்தி உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன் நீளம் 15 m உம் அகலம் 7 m உம் ஆகும்.. நிழற்றப்பட்ட பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பகுதியில் பூ வளர்க்கப்பட்டுள்ளது. (AP =AQ =BR =BS ஆகும்)




a) QR இன் நீளத்தைக் காண்க.
b) பூ வளர்க்கப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைக் காண்க.
c) புல் வளர்க்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.
d) புல் வளர்க்கப்பட்ட பகுதியில் புல் நட முன்பாக 10 cm ஆழத்திற்கு மண் அகற்றப்பட்டது எனின், அகற்றிய மண்ணின் கனவளவு யாது?

09) 6, 10, 14, x, y ........................... என்பது கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் 5 உறுப்புகளாகும்.

a) x, y இன் பெறுமானம் காண்க.
b) விருத்தியின் பதினைந்தாவது உறுப்பைக் காண்க.
c) முதல் 15 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.
d) 6, 18 இற்கிடையிலான கூட்டலிடைகள் 2 தருக.



நெடுங்கேணி நகரப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் புனரமைக்கப்படாத சனசமூக நிலையக்கட்டடத் தோற்றம் (40)




யாழ்.லயன்ஸ் கழகமும்,நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய சூழலில் மரக்கன்றுகள் நாட்டும் வைபவம் இடம் பெற்றபோது... (48)



## நிகழ்வுகளின் பதிவுகள்....


இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் கீழ் உள்ள சாவகச்சேரி பிரிவில் அண்மையில் யாழ்.கிளையினரால் மறவன் புலோ மேற்கு, முன்பள்ளியில் செஞ்சிலுவைச் சங்க பரப்புரை செயற்பாடு இடம்பெற்றபோது.... (படம்: பார்த்தீபன்)



யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் எம்.செசன் யாழ்-ஒஸ்மானியாக்கல்லூரிக்கு விஜயம் செய்தபோது.... (105)



பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர் , சிறுமியர் , முதியோர் , மாற்றுவலுவுள்ளோர் தின விழா அண்மையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது... (90)



கொக்குவில் மேற்கு ஞானபண்டிதா வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது... (48)



சனச திட்டத்தின் மூலம் கரணவாய் நாவலடி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்துவைக் கப்பட்டது. (18)

# கதவைத் திறக்கிறது பிரிட்டன்

# தொழிற்சந்தையில் குடிப்பம் நிச்சயம்

பிரிட்டனின் கதவுகள் ஜனவரி 1-ஆம் திகதி உங்களுக்காக திறக்கின்றன. தொடக்க நாட்களில் பிரிட்டனுக்குள் செல்வதை தவற விடாதீர்கள். கையில் ஒரு உத்தியோகத்துடன்" இந்த விளம்பரம், ரொமேனியா நாட்டு பிரபல பத்திரிகைகள் அனைத்திலும் தினமும் வெளியாகின்றது.

எம்பிளாய்மென்ட் ஏஜென்சி ஒன்றால் கொடுக்கப்படும் விளம்பரம் இது. பிரிட்டனில் ஹோட்டல்கள்," பாஸ்ட் பூட் உணவகங்கள் தொடக்கம், ஹாஸ்பிட்டல் உத்தியோகங்கள் வரை இவர்களால் விளம்பரப்படுத்தப் படுகின்றன. அனைத்து பொசிஷன்களுக்கும் வேலை தொடங்கும் திகதி ஜனவரி 1, 2014.

அன்று என்ன விசே'ம்? பல்கேரியா, மற்றும் ரொமேனியா நாட்டவர்கள் விசா இல்லாமல் பிரிட்டனுக்குள் வரலாம், குடியேறலாம், பணிகளில் இணைந்து கொள்ளலாம், புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கலாம் என்ற சட்டம் நடைமுறைக்கு வருகிறது.

ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தில், அங்கத்துவ நாடுகளிடையே குடியேற்ற சுதந்திர சட்டம் உள்ளது. அதன்படி, ஒரு ஐரோப்பிய ஒன்றிய நாட்டின் பிரஜை, மற்றொரு ஐரோப்பிய ஒன்றிய நாட்டுக்குள் எவ்வித முன் அனுமதியும் இன்றி குடியேற முடியும்.

ரொமேனியாவும், பல்கேரியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தில் 2007 ஆம் ஆண்டு இணைந்தன. ஆனால், அந்த நாட்டவர்கள் தமது நாட்டில் குடியேறுவதை பிரிட்டன் அனுமதிக்காமல் இருந்தது. காரணம், அந்த இரு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஏழ்மையான நாடுகள். பிரிட்டனில் மணிக்கு 7 பவுண்ட்ஸ் சம்பளம் பெறும் அதே வேலையை ரொமேனியாவில் செய்யும் ஒருவருக்கு கிடைப்பது, பிரிட்டிஷ் நாணய பெறுமதியில் வெறும் 1.5 பவுண்ட்ஸ்தான்.

இதனால், ரோமேனியா, பல்கேரியா நாட்டவர்களுக்கு பிரிட்டனின் எல்லையை திறந்து விட்டால், லட்சக்கணக்கான




அந்நாட்டு மக்கள் வேலை தேடி பிரிட்டனுக்குள் வந்து குவிந்து விடுவார்கள். அதுதான், பிரிட்டன் அவர்கள் வருவதை அனுமதிக்காமல் இருந்தது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டனுக்கு அழுத்தம் மேல் அழுத்தம் கொடுக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகளிடையே பிரிட்டன் பாரபட்சம் காட்டுகிறது என குற்றச்சாட்டு கிளம்பியது. இப்போது வேறு வழியில்லாமல், அவ்விரு நாட்டவர்களுக்காகவும் தமது எல்லைகளை வரும் ஜனவரி 1 ஆம் திகதி முதல திறப்பதாக கூறியுள்ளது

இதனால் பிரிட்டனின் எல்லைகளில் டிசம்பர் 31 ஆம் திகதி இலட்சக்கணக்கான ஆட்கள் வரிசையில் காத்திருக்கப் போகிறார்கள் என கூறுகிறார்கள்.

## ஏல விற்பனைக்கு வருகிறது மிகஅரிய வகை வைரக்கல்

(ஜெனிவா)

உலகிலேயே மிக அரிதான பெரிய ஆரஞ்சு நிற வைரம் அடுத்த வாரம் ஏலத்திற்கு வர வுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் வருகிற 5ஆம் திகதி இந்த வைரம் ஏலத்தில் விடப்பட உள்ளது. இது 17 முதல் 20 மில்லியன் டொலர் வரை ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



டோக்கியோவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கிலாவ்ரேவ் (இடது) தலைநகர் டோக்கியோவில் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் பியூமியோகிஸ்ஹிடாவை சந்தித்து பேசினார்.

## உலகச் செய்திகள்

# ரயில் விபத்தில் 10 பேர் பலி ஆந்திராவில் விபரீதம்



ஆந்திர மாநிலம் விஜயநகரம் அருகே, ரயில் மோதிய விபத்தில், பயணிகள் பத்து பேர் பலியாகினர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். கேரளாவின் ஆலப்புழா நகரில் இருந்து ஜார்கண்ட் மாநிலம் தன்பாத்துக்கு, பொகாரோ எக்ஸபிரஸ் ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில், நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு, ஆந்திர மாநிலம் விஜயநகரம் வழியாக சென்று கொண்டிருந்தது.

அப்போது, ஆலப்புழா- தன்பாத் ரயிலில் தீப்பற்றியுள்ளதாகவும், பெட்டிகள் எரிந்து விடும் என்றும் கிளம்பிய வதந்தியை நம்பிய பயணிகள் சிலர், அபாயச்சங்கிலியை பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தினர்.

உடனே பலர் ரயிலில் இருந்து கீழே குதித்தனர். அப்போது, அருகேயுள்ள மற்றொரு தண்டவாளத்தில் வந்த ராய்கர் (ஒடிசா மாநிலம்)- விஜயவாடா ரயில், பயணிகள் மீது மோதியது. இதில் பயணிகளில் பத்து பேர், பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து நடந்த பகுதிக்கு, ரயில்வே மற்றும் மருத்துவக் குழுவினர் விரைந்துள்ளனர். பலியானோர் எண்ணிக்கை, மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மத்திய ரயில்வே அமைச்சர் மல்லிகாஜூன கார்கே, மீட்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# நிச்சயம் பழிவாங்குவோம் தலிபான்கள் சூளுரைப்பு

## தளபதியின் மரணத்தால் கொதிப்பு



பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பழங்குடியின பகுதியில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில், தொரிக்-இ-தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஹக்கீமுல்லா மெஹ்சூத் கொல்லப்பட்டார்.

அவருடன் அப்துல்லா, தாரிக் மெஹ்சூத் மற்றும் ஹக்கீமுல்லா மெஹ்சூத்தின் மெய்காப்பாளன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

தங்கள் தலைவனை கொன்றதால் கடும் ஆத்திரமடைந்துள்ள தலிபான் இயக்கம், இதற்கு பழிவாங்கப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் எங்கள் பழிவாங்கும் நடவடிக்கை இருக்கும் ஆளில்லா விமான தாக்குதலுக்கு பாகிஸ்தான் அரசு முழு உடந்தையாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

எங்கள் எதிரியை எங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று வடக்கு வசிரிஸ்தான் தலிபான் கமாண்டர் அபு ஓ[illegible] கூறியதாக நியூயார்க் டைம்[illegible] செய்தி வெளியிட்டுள்ளது.

# மாணவர் விசா விதிமுறைகளை தளர்த்துகிறது அவுஸ்ரேலியா

## ஆசியாவின் மாணவர்களுக்கு வாய்ப்பு

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளிலிருந்து, அதிக மாணவர்கள் வருவதற்கு வசதியாக, விசா நடைமுறைகளை எளிதாக்க, அவுஸ்ரேலியா திட்டமிட்டுள்ளது. அவுஸ்ரே லியாவில்





தற்போது, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் படிக்கின்றனர். மாணவர் விசாவில் செல்லும் பலர், படிப்பு முடிந்து, ஓட்டல், பெற்றோல் நிலையங்கள் போன்றவற்றில் வேலை செய்கின்றனர். இவர்களில் பலர், அந்நாட்டு இளைஞர்களால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகம் நடந்தன. இதன் காரணமாக, முந்தைய அவுஸ்ரேலிய அரசு, மாணவர் விசாவில் கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்தியது. இதனால், இந்தியா, 'சீனாவிலிருந்து, அவுஸ்ரேலியாவுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.

இதனால், அவுஸ்ரேலிய கல்வித்துறையின் வருவாய் குறைந்தது. இதையடுத்து, வெளிநாட்டு மாணவர்களைக் கவர, விசா நடைமுறையை எளிமைப்படுத்த தற்போதைய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், அவுஸ்ரேலியாவில் படிக்க அவர்களது வங்கி கணக்கில் குறைந்த பட்சம் 10 ஆயிரம் அவுஸ்ரேலிய டொலர் கணக்கு இருக்க வேண்டும் என முந்தைய விசா' நடைமுறையில் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த நிபந்தனையை தளர்த்த அவுஸ்ரேலிய அரசு முன்வந்துள்ளது. இத்த கவலை அவுஸ்ரேலிய குடியுரிமைத்துறை அமைச்சர் ஸ்காட் மாரிசன் மற்றும் கல்வித் துறை அமைச்சர் கிரிஸ்டபர் பாயன் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

# தீவிரவாதிகள் ஊடுருவல் பாக்.மீது குற்றச்சாட்டு



எல்லைப் பகுதியில், பயங்கரவாதிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது, கவலை அளிக்கிறது. பாக்., ராணுவத்தின் உதவியுடன் தான், பயங்கரவாதிகள், இந்திய எல்லைக்குள் ஊடுருவுகின்றனர், என, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி, கவலை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அந்தோணி, டில்லியில், நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்தியா - பாக்., எல்லை பகுதியில் நடக்கும் சம்பவங்களை, கூர்ந்து கவனித்து வருகிறோம். நம் எல்லைக்குள், பயங்கரவாதிகள் ஊடுருவும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது, கவலை அளிக்கிறது. பயங்கரவாதிகளின் ஊடுருவலுக்கு, பாக்.இராணுவம் உதவுகிறது என்பது, உண்மை தான்.

பாக்கிஸ்தான் இராணுவத்தின உதவி இல்லாமல், பயங்கரவாதிகளால், ஊடுருவ முடியாது. எல்லை பகுதி, இந்திய எல்லை பாதுகாப்பு படையின் கண்காணிப்பில் உள்ளது.

அதேபோல், பாக்., எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில், அந்த நாட்டு இராணுவத்தினர், குவிக்கப்பட்டுள்ளனர்.

பாக்கிஸ்தான் இராணுவம் உதவி அவர்களை கடந்து தான், பயங்கரவாதிகள், நமது எல்லைக்கு வர முடியும். இதனால் தான், பயங்கரவாதிகளுக்கு, பாக்., இராணுவம் உதவுவதாக கூறுகிறேன். சில நேரங்களில் மறைமுகமாகவும், சில நேரங்களில், நேரடியாகவும், பயங்கரவாதிகளுக்கு பாக்.இராணுவம் உதவுகிறது. பாகிஸ்தானுட னான உறவை, பலப்படுத்த வேண்டும் என்பதே, நமது எண்ணம். ஆனால், ஊடுருவலுக்கு உதவுவதை, பாக், இராணுவம் நிறுத்தாத வரை, எந்தவிதமான சுமுகமான நடவடிக்கையையும் மேற் கொள்ள முடியாது. இவ்வாறு, அந்தோணி கூறினார்.

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு வங்கியில் சேமிப்பதாகக் கூறி பண மோசடி

(காரைநகர்)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு சேமிப்பு என நாசூக்காகப் பேசி பண மோசடி ஒன்று அண்மையில் காரைநகரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனின் வீட்டுக்கு வந்த ஒருவர் தாம் கல்வித் திணைக்களத்தில் இருந்து வந்ததாகவும், தாங்கள் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஒன்பது பெயர்களைத் தெரிவு செய்துள்ளோம். அதில் இவரும் ஒருவர் எனக்கூறிய அவர், எமது திணைக்களம் 5 ஆயிரம் ரூபா சேமிப்பில் போடப் போகின்றது எனவும், நீங்கள் 5 ஆயிரம் ரூபா போட வேண்டும் என நாசூக்காக கதைத்து 5 ஆயிரம் ரூபாவை வாங்கிக் கொண்டு பாடசாலையில் இது சம்பந்தமான கூட்டம் நடைபெறப் போகின்றது. நீங்களும் மாணவனின் பிறப்புச் சான்றிதழ் பிரதியுடன் அங்கு வாருங்கள் என கூறிச் சென்றுள்ளார்.

மாணவனின் பெற்றோர் பாடசாலைக்குச் சென்ற போது அங்கு பாடசாலை பூட்டிய நிலையில் இருக்கக் கண்டு சக மாணவர்களின் பெற்றோர்களிடம் விசாரித்த போது அப்படி யாரும் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தம்மை மிகவும் சாதுரியமாக ஏமாற்றிவிட்டார்கள் எனக் குறித்த மாணவனின் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

பல வழிகளிலும் திருட்டுக்களைச் செய்தவர்கள் இப்போது சந்தர்ப்பத்தை தமதாக்கிக் கொண்டு ஏமாற்றுகிறார்கள் என்றும், இதனைத் தடுக்க எல்லோரும் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (50)

# அறநெறிப் பாடசாலைக்கு புதிய நிரந்தரக் கட்டடம்

(யாழ்.நிருபர்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டையில் நீண்ட காலமாக இந்து மாணவர் நலன்கருதி இயங்கி வரும் கஜமுகன் அறநெறிப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்தை அமைப்பதற்கு பங்குருமுருகன் ஆலய தர்மகர்த்தாவும், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க முன்னாள் உறுப்பினருமான சுந்தரமூர்த்தி புவனகுமார் முன்வந்துள்ளார்.

இந்து ஆலயங்கள், பாடசாலை இந்து வாலிபர் சங்க தலைமைச் செயலகம் முதலியன அமைந்திருக்கும் பொருத்தமான சூழலில் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் சகல வசதிகளுடனும் அமையவிருப்பதால் பெரும் எண்ணிக்கையான மழலைகள் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதோடு ஏனைய மாணவர்களும் அறநெறிக் கல்வி மற்றும் நுண்கலைகளைப் பயில்வதற்கு வாய்ப்பாக அமையுமெனவும் வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார். (10)

## காணிப் பிணக்குகளைத்....

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான கலந்துரையாடல்கள் காலத்திற்கு காலம் நடைபெறுகிறது எனவும், அந்த வகையிலேயே மேற்படி திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கின்ற கூட்டமும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி நாளைய தினம் யாழ்.மாவட்டக் காணி தொடர்பான பிணக்குகளும், புதன் கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட காணிப் பிணக்குகளும், வியாழக்கிழமை மன்னார், வவுனியா மாவட்ட காணிப் பிணக்குகளும் ஆராயப்படவிருக்கின்றன.

இதனைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் மேற்படி கலந்துரையாடல் இடம்பெறப்போவதில்லை. இவ்வாறான காணி தொடர்பிலான கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்படுகிறது. கடந்த காலங்களில் கொழும்பிலும் பல கூட்டங்கள் நடந்துள்ளன. எனவே உண்மைத் தன்மை அவ்வாறிருக்க சில பத்திரிகைகள் ஏன் இவ்வாறு செய்தியினை வெளியிட்டுள்ளன என அவர்களைத் தான் கேட்க வேண்டும் என வடமாகாண காணி ஆணையாளர் தயானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் எதிர்வரும் வாரம் அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் காணி தொடர்பான கூட்டமானது 2013/1 காணி சுற்று நிருபத்திற்கு அமைவாக பிரதேச செயலர்களால் தீர்வுகள் காண முடியாத அரச காணிகள் தொடர்பான பிணக்குகளுக்கு கொள்கை ரீதியாக எவ்வாறு தீர்வுகளைக் காண்பது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமே நடைபெறவுள்ளது. மாறாக காணி சுவீகரிப்பு சம்பந்தமான கூட்டம் அதுவல்ல எனத் திட்டவட்டமாகக் கூறமுடியும், எனத்தெரிவித்த அவர், இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவானது காணி சுவீகரிப்புக்கு ஆதரவாக இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்யவில்லை. அவர்கள் அதனை எற்றுக் கொள்ளப்போவதும் இல்லை. கடந்த முப்பது வருடங்களாக வடக்கில் காணிகள் தெடர்பில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது சம்பந்தமான ஒரு பயிற்சிக் கூட்டமாகவே எதிர்வரும் 5, 6, 7 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடக்கவிருக்கிறது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கருத்துத் தெரிவிக்கும்போது, நீதியமைச்சின் கீழ் உள்ள இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவானது வடக்கு, கிழக்கில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகளைத் தீர்க்கின்ற போது பிரதேச செயலர்கள் கொள்கை ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு கொள்கை ரீதியாக எதிர்கொள்கின்ற பிணக்குகளை எவ்வாறு தீர்த்து வைக்கலாம் என்பது தொடர்பிலான ஒரு பயிற்சிக் கூட்டமாகவே எதிர்வரும் வாரம் அநுராதப்புரத்தில் நடைபெறவிருக்கிறது தவிர, காணி சுவீகரிப்பு சம்பந்தமான கூட்டம் அல்ல என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் 5,6,7 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெறுகின்ற கூட்டமானது சில ஊடகங்களால் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்குப்படுத்தப்பட்ட கூட்டமல்ல அதாவது மேற்படி சுற்று நிருபத்ததிற்கு அமைவாக அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகள் பிரதே செயலர்களால் தீர்த்து வைக்கின்ற போது சில பிணக்குகள் அதாவது ஒரே காணிக்கு பலர் உரிமை கோருவது, தான் குடியிருக்கும் அரச காணியினை வேறொருவருக்கு விற்பனை செய்வது, மிகக் குறுகிய காலத்திற்குள் அரச காணியினை பிடித்து குடியிருப்பது உள்ளிட்ட பிணக்குகளுக்கு எவ்வாறு தீர்வுகளைக் காண்பது தொடர்பில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் இக்கூட்டமானது அநுராதபுரத்தில் இடம்பெற இருப்பதற்கு காரணம் கூட்டத்தை நடத்துவதற்கு உரிய வசதி வாய்ப்புகள் அதாவது இக்கூட்டத்திற்கு நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளரர்கள் வரவழைக்கப்படவுள்ளதோடு, மேலும் பல ஒலி, ஒளி வசதிகளை கருத்தில் எடுத்தே சட்ட உதவி ஆணைக்குழு அநுராதபுரத்தில் ஏற்பாடு செய்துள்ளதே தவிர இது ஒரு இரகசியக் கூட்டமல்ல நூறுவீதம் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறவுள்ள கூட்டமே எனவும் தெரிவிக்கப்படுகிறது. (29)

## வடமாகாண...

வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் தற்போது யுத்தம் முடிவடைந்து மக்கள் அனைவரும் நிம்மதியுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அங்கு இராணுவ அதிகாரியொருவர் ஆளுநராக இருக்கின்றமையானது உண்மையில் அங்குள்ள தமிழர்களின் சுதந்திரத்தை பாதிக்கின்றது.

அதுமட்டு மல்ல, வடக்கில் தற்போது இராணுவ அதிகாரி ஒருவர் ஆளுநராக இருப்பது அவசியமே இல்லாத ஒன்றாகும். எம்மைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு நிச்சயமாக ஆதரவைத் தெரிவிப்போம்.

கூட்டமைப்புக் கூறுவ்தைப் போன்று வடக்கில் ஒரு சிவில் அதிகாரியொருவரை ஆளுநராக நியமித்தால் அது அங்குள்ள தமிழர்களுக்கு நிம்மதியும், சுதந்திரத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களின் வேண்டுகோள் நியாயமானது.

இந்த மாற்றம் சம்பந்தமாக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவே தீர்மானம் எடுக்க வேண்டும். அவருக்குத் தான் இவ்விடயத்தை தீர்த்து வைக்க பூரண அதிகாரம் காணப்படுகிறது.

அத்தோடு வடக்கில் அகதி முகாம்களில் வாழ்கின்ற தமிழர்களை மீட்டெடுத்து அவர்களின் சொந்த வீடுகளிலேயே குடியமர்த்த வேண்டும். இதற்காக இராணுவத்தின் வசம் காணப்படும் தமிழர்களின் வீடுகளும், காணிகளும் மீண்டும் மக்களுக்கே கையளிக்கப் படவேண்டும்.

தேசிய பாதுகாப்புக் கருதி பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகள் சம்பந்தமாக இராணுவ உயர் பீடமே தீர்மானிக்க வேண்டும். என்றாலும் தேவைக்கதிகமாக இராணுவத்தின் வசமுள்ள காணிகளை மீண்டும் உரியவர்களுக்கு கையளிப்பதே ஆரோக்கியமான விடயமாகும் என்றார்.

## பட்டிக்குடியிருப்புக்கான பேருந்து சேவை ஆரம்பம்

(நெடுங்கேணி)

வவுனியாவிலிருந்து பட்டிக்குடியிருப்புக்கான அரச பேருந்து சேவை 30 வருடங்களின் பின் இன்று ஆரம்பமாகின்றது.

வவுனியாவிலிருந்து ஒரு மணிக்கு புறப்படும் பேருந்து நெடுங்கேணி ஊடாக பட்டிக்குடியிருப்பைச் சென்றடையும். அங்கிருந்து 2.30 மணிக்குப் புறப்படும் பேருந்து நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன் ஊடாக காரைநகரைச் சென்றடையும்.

அவ்வாறே காரைநகரிலிருந்து இதே பாதையூடாக வவுனியா வரைக்கும் சேவைகள் இடம் பெறும் என அரச பேருந்து சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (40)

## ஜனாதிபதி....

நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வாரம் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு மாகாண சபைத் தேர்தல் குறித்துக் கலந்துரையாடியது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் குறித்தோ, பொதுத் தேர்தல் குறித்தோ கலந்துரையாடப்படவில்லை. எனவே, இவ்விரு தேர்தல்களும் அடுத்த வருடம் நடைபெறமாட்டாது.

அடுத்த வருடம் மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்கான தேர்தல்களை நடத்துவது குறித்தே அரசாங்கம் சிந்தித்து வருகின்றது. சரியான நேரம் வந்தவுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## தவறான...

கமலேஷ் சர்மாவினால் நியமிக்கப்பட்ட சுதந்திரமான அறங்கூறுநர் ஆணைக்குழுவின் இரண்டாவது அறிக்கை சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்தது.

கடந்த வசந்த காலத்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களின் செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் அந்த அமைப்பின் நோக்கம் மற்றும் தரம் தொடர்பில் கடுமையான பலவீனம் கொண்டு காணப்பட்டதாக தென்னா பிரிக்காவின் முன்னாள் பிரதம நீதியரசர் தலைமையிலான ஆணைக்குழுவின் சட்டக் கருத்தாக இருந்தது.

பொதுநலவாயத்தின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளை முழுமையாக பாதுகாக்க வேண்டும் என்ற விடயத்தில் செயலகம் உரிய செயற்பாடு களை முன்னெடுக்கவில்லை என்றார்.

## வடக்கிற்கு...

நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மக்கெல்லியும், தாம் வடபகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளதாக ஏற் கனவே அறிவித்துள்ளனர்.

எனினும், எப்போது என்ற விபரத்தை அவர்கள் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இசைப்பிரியா...

எழுந்திருக்கும் படுகொலைகள் தொடர்பான அச்சங்களுக்கும், சந்தேகங்களுக்கும் விடை காண்பதாக அமையும்.

தமிழ் மக்களிடையே இருக்கும் சந்தேகங்களுக்கும், அச் சங்களுக்கும் நியாயமும், பரிகாரங்களும் காணப்பட வேண்டும். ஆகவே எமது கோரிக்கைக்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கையை எடுத்து விரைவில் உண்மையை உலகிற்கு தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம் என ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாநாட்டில்...

அவரை யாழ்ப்பாணம் வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், பொதுநல வாய மாநாட்டில் பங்கேற்க இந்தியப் பிரதமர் இலங்கை செல்வாரேயானால், அவர் வட மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் செல்லலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், கொழும்பில் இம் மாதம் இடம்பெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை, பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் இதுவரை எவ்வித முடிவையும் அறிவிக்கவில்லை. இந்நிலையில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பு சென்று அவரின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் கிளம்பியுள்ள பலத்த எதிர்ப்பையும் மீறி பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கும் முடிவை எடுத்தால், வடக்கு, கிழக்குக்குச் சென்று அங்குள்ள தமிழ் மக்களின் நிலைமைகளை பார்வையிடுவதன் ஊடாக இவ் விவகாரம் தொடர்பிலான அழுத்தங்களை ஓரளவு தணிக்கலாம் என சில அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்குக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஜேர்மனியில்...

ஆகியோருடன் சுண்டார்ன் நகரத்தில் அல்போன்ஸ் வசித்து வந்தார். 24 வருடங்களுக்கு முன் ஜேர்மன் சென்ற அவர் அந்நாட்டு பிரஜாவுரிமையைப் பெற்றவர். இவரது சுற்றாடலில் 350 புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்றனர். அல்போன்ஸிற்கு அஞ்சலி செலுத்துகின்ற வகையில் இவர்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடாமல் தவிர்த்துள்ளனர்.

# பத்தாயிரம் இலங்கையர் சவுதியிலிருந்து திரும்பினர்



(கொழும்பு)

சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் வெளியேறுவதற்கு அந்நாட்டு அரசினால் வழங்கப்பட்ட விசேட பொது மன்னிப்புக் காலம் இன்று முடிவடையவுள்ள நிலையில் பொது மன்னிப்புக்கு உட்பட்ட சுமார் பத்தாயிரம் இலங்கையரும் நாடு திரும்பியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் துணை பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கள ரன்தெனிய, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்துக்குள் அதனைப் பெற தகுதியுடைய சுமார் 10,000 பேரும் நாட்டிற்கு அழைக்கப்பட்டு விட்டதாக தெரிவித்தார்.

மேலும் பெண்கள் உட்பட ஏனைய 6,000 பேரைப் பொறுத்தவரை சட்ட விரோதமாக தங்கியிருந்தாலும் சவுதி அரேபிய அரசாங்கத்தின் பொது மன்னிப்பு வரையறைக்குள் அவர்கள் உட்படாதவர்கள் என்றும் அவர் கூறினார்.

அதாவது விசா இன்றி தங்கியிருந்தமை, கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யாமை போன்ற அந்த நாட்டு சட்ட திட்டங்களை இவர்கள் மீறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியானவர்களை நாட்டுக்கு திருப்பி அழைப்பதற்கான முயற்சிகள் சவுதியில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவர்களை நாட்டுக்கு அழைப்பது தொடர்பில் பிரச்சினையாகவே உள்ளது என்றும், ஆயினும் இதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மங்கள ரன்தெனிய மேலும் தெரிவித்தார்.

# சாதாரண மக்கள் எவருக்கும் கசினோவால் பாதிப்பில்லை

## என்கிறார் அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

கொழும்பில் அமைக்கப்படவுள்ள கசினோ சூதாட்ட புரத்தால் இந்நாட்டில் வாழும் சாதாரண குடிமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா தெரிவித்தார்.

பேராதனையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன்றும் கொள்ளுப்பிட்டி போன்ற சில பகுதிகளில் கசினோ சூதாட்டம் உள்ளது. பரவலாக உள்ளதை ஒரு ஒதுக்குப்புறமாக கொண்டு வந்து சுற்றுலாத் துறையினருக்கு சந்தர்ப்பம் வழங்குவதே இதன் நோக்கமாகும்.

எமது நாட்டில் பரவலாக அதிஷ்டலாபச் சீட்டு விற்கப்படுகிறது. சாதாரணமாக சாராயத் தவறணைகள் உண்டு. சாதாரண



மக்கள் இவற்றைக் கையாள்கின்றனர். ஆனால் கசினோ சூதாட்ட மையம் சாதாரண மக்களுடன் தொடர்புடையவை அல்ல. அதற்கு போகிறவர்கள் வெளிநாட்டவர்கள்தான்.

எனவே, கசினோக்கள் எமது அன்றாட நடவடிக்கைகளைப் பாதிக்காது. மாறாக நாட்டிற்கு வருமானமும் வெளிநாட்டுச் செலாவணியும் குவியும். எனவே இது விடயமாக பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள் மேற்பார்வை பிரதான அலுவலகம் இலங்கையில்

(கொழும்பு)

சார்க் வலயத்தில் பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் மேற்பார்வை மத்திய நிலையத்தின் பிரதான காரியாலயம் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் பொலிஸ் திணைக்களத்தில் இந்த மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனூடாக சார்க் வலய நாடுகளில் பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பிலான தகவல்கள் பரிமாற்றப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

சார்க் வலயத்தை பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் அற்ற வலயமாக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

# நடனத்துறை மாணவர்களின் பகிஷ்கரிப்பு நிறைவடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் கடந்த எட்டு நாட்களாக நடனத்துறை மாணவர்கள் நடத்தி வந்த வகுப்பு பகிஷ்கரிப்பு சுமூகமான முறையில் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று முதல் வழமை போன்று வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்லவுள்ளார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி. சிவநாதனினால் கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்ட மாணவிகளின் நடனத் துறை பிரச்சினைகளுக்கான தீர்வை எட்டும் வகையில் ஆறு பேர்களைக் கொண்ட உபகுழு ஒன்று நியமனம் செய்யப்பட்டது.

இந்தக் குழுவில் இடம்பெற்ற இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் வேதநாதன் கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிலேந்திரன் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் உளவியல்துறைத் தலைவர் கலாநிதி கஜவிந்தன் நுண்கலைத்துறையின் இசைத் துறை தலைவர் பேராசிரியர் தர்ஷனன் மொழியியல்துறைத் தலைவர் விரிவுரையாளர் திருமதி சிவபாலன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்கள்.

இவர்கள் துரிதமாக இயங்கி உப குழு நியமிக்கப்பட்ட வெள்ளிக்கிழமையே உரிய மாணவர்களுடன் நுண்கலைப் பீடத்தில் கலந்துரையாடி மாணவர்களுடைய பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன் மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் ஏற்று ஒரு தீர்வை எட்டியதன் அடிப்படையில் இன்று முதல் நடனத் துறை மாணவர்கள் வழமை போன்று வகுப்புகளுக்கு செல்லவுள்ளதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்பகுதி மீனவரின் தொழிலுக்கு மன்னார் மீனவ சமூகம் எதிர்ப்பு

(மன்னார்)

மன்னார் சௌத்பார் தென் பகுதி கடற்கரைப்பகுதியில் தங்கி நின்று வாடிகளை அமைத்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள தென் பகுதி மீனவர்களுக்கு மன்னார் பனங்கட்டுக்கோட்டு மீனவ சமூகம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பனங்கட்டுக்கோட்டு மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் சௌத்பார் கடற்கரை பனங்கட்டுக்கோட்டு கிராம மீனவர்கள் தொழில் செய்வதற்கான ஒரு இடமாக காணப்படுகின்றது. ஆனால் வருடா வருடம் தென்பகுதி மீனவர்கள் குடும்பம் குடும்பமாக வந்து வாடிகளை அமைத்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது குடும்பங்களுடன் வருகின்றனர்.

இவர்கள் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் வருவார்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை தொழில் செய்வார்கள்.

சுமார் 6 மாதம் தங்கி நின்று மீன் பிடியில் ஈடுபடுகின்றனர்.

தடை செய்யப்பட்ட அனைத்து மீன்பிடி தொழில்களையும் அவர்கள் செய்கின்றார்கள். இவர்களுக்கு கடற்படை, பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இன்னும் ஒரு சில தினங்களில் 190 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் படகுகளும் சௌத்பார் பகுதிக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் அப்பகுதியில் பொலிஸாரும், கடற்படையினரும் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த தென் பகுதி மீனவர்களின் வருகையால் எமது உள்ளூர் மீனவர்கள் பாரிய அளவில் பாதிப்புக்களை சந்திக்கின்றனர். சௌத்பார் கடற்பரப்பில் எமது மீனவர்கள் மேற்கொள்ளும் கரை வலைத்தொழிலும் பாதிப்படைகின்றது.

சௌத்பார் கடற்பரப்பில் தென் பகுதி மீனவர்கள் தங்கி நின்று சுதந்திரமாக தொழில் செய்கின்றனர். ஆனால் எமது மீனவர்கள் சௌத்பார் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்றால் படையினருடைய கெடுபிடிகளுக்கு மத்தியில் பாஸ் பெற்ற பின்பே தொழில செய்ய முடிகின்றது.

எனவே இம்முறை இந்த தென் பகுதி மீனவர்களுடைய வருகையை நாங்கள் முற்றுமுழுதாக எதிர்க்கவுள்ளோம்.

இவர்களுக்கு படையினர் பாதுகாப்பை வழங்குகின்றனர். ஆனால் எமது மீனவர்களுக்கு அசசுறுத்தல்களை விடுக்கின்றனர்.

எனவே மன்னார் மாவட்ட கடல் தொழில் உதவிப்பணிப்பாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் டெனிஸ்வரன் ஆகியோர் நடவடிக்கை எடுத்து இந்த மீனவர்களின் வருகையை நிறுத்த வேண்டும்.

அல்லாது விட்டால் தென் பகுதி மீனவர்களின் வருகைக்கு எதிராக மன்னார் மாவட்ட மீனவ சமூகம் பாரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கும் என அந்த மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவருக்கு வாள்வெட்டு

யாழ் உடுவில் தெற்கு மானிப்பாய் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த ஆறு பேர் மீது இனந்தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் மாலை வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது.

இதனால் படுகாயமடைந்த ஆறு பேரும் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மதுபோதையில் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத சிலரே வாள்வெட்டினை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எஸ்.சிவஞானமூர்த்தி (வயது - 57), சி.தவனேஸ்வரி (வயது - 45), சி.கிருஸ்ணகுமார் (வயது - 23), திலக்ஷன் (வயது - 15) மற்றும் என். அன்னம்மா (வயது - 74) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

# 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி

(கொழும்பு)

மகிந்தோதய திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 1000 இரண்டாவது நிலைப் பாடசாலைகளுக்கு தொழில்நுட்பவியல் ஆய்வுகூட வசதிகளை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இத்திட்டத்தின்கீழ் 62 ஆயிரம் கணனிகளையும் ஆயிரம் கணனி குறிப்பு புத்தகங்களும் இப்பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப கட்டமாக 1.7 பில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச தரம் வாய்ந்ததாக உருவாக்கப்பட்ட கணனிகளை வழங்குவதற்கு உள்ளூர் கம்பனிகளை கோரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வாறு வழங்கப்படும் உபகரணங்களை பரிசோதனை செய்ய அரசாங்கம் குழுவொன்றையும் நியமித்துள்ளது.

# ஊர்மனைக்குள் யானைகள் அச்சத்தில் கிராம மக்கள்

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராமங்களில் இரவு நேரங்களில் நுழையும் யானைகள் நெல் மூடைகள் மற்றும் பயன்தரு மரங்களை அழித்துச் செல்வதாக பிரதேச செயலருக்கு அப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கரப்புக்குத்தி, நைனாமடு, சின்னடம்பன், மாரா இலுப்பை மற்றும் குளவிசுட்டான் ஆகிய கிராமங்களிலேயே இவ்வாறு யானைகள் புகுந்து நாசம் செய்வதாக குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ள நிலையில், தண்ணீர் தேடி யானைகள் இரவு வேளையில் ஊர்மனைக்குள் வருவதாகவும் இதனால் தாங்கள் நித்திரையின்றி தவிப்பதாகவும் மக்கள் பிரதேச செயலருக்கு தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.